# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 11.06.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

லாஹுரில் தீவிரவாதிகளின் வன்முறை மற்றும் மிருகத்தனத்திற்குப் பலியான உயிர்த்தியாகிகளைப் பற்றி கூறவிருக்கிறேன்.

சென்ற குத்பாவில் கூறியதுபோன்று மரணத்தை கண்முன் கண்ட பிறகும் எந்த அஹ்மதியும் எந்தவிதமான பயத்தையும் வெளிக்காட்டவில்லை. தீவிரவாதிகளுக்கு முன் கரம் கூப்பவும் இல்லை – உயிர் பிச்சை கேட்கவும் இல்லை. மாறாக, துஆவில் மூழ்கி இருந்தனர். ஒருவர் மற்றவரை பாதுகாப்பதில் மூழ்கியிருந்தனர். தனது உயிரைக் கொடுத்து மற்றவர்களை காப்பாற்ற நினைத்தனர். அங்குமிங்கும் சிதறி ஓடவில்லை.

துஆவின் மூலமே குண்டுகளை வீசியவர்களை எதிர்கொண்டனர். கொடுமையிழைத்தவர்களாக அவர்கள் குண்டுகளை வீசிக் கொண்டிருந்தனர்.

துஆ செய்தவர்களுள் சில முஃமின்களுக்கு அல்லாஹ் ஷஹாதத்தின் பதவியை அளித்தான்; நிரந்தர வாழ்வை வழங்கினான். இவர்கள் அனைவரும் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் ஒளிவிட்டு பிரகாசிக்கும் நட்சத்திரங்களாக இன்ஷா அல்லாஹ் மின்னிக் கொண்டிருப்பார்கள்.

அல்லாஹ் இவர்களின் தகுதிகளையும் உயர்த்திக் கொண்டே செல்வானாக! எவ்வாறிருப்பினும், நான் ஷுஹதாக்களை – உயிர்த்தியாகிகளைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு முன் ஓர் முக்கியமான விஷயத்தை கூற விரும்புகிறேன். என்னிடம் சில ஜமாஅத்துகளிலிருந்து, ஷுஹதாக்களுக்காக ஒரு தொகையை நாங்கள் கொடுக்க விரும்பினால் எந்தப் பிரிவின் கீழ் அதனை கொடுக்க வேண்டும் என்று கேட்கவும் செய்கிறார்கள்.

மேலும் சிலர், ஷுஹதாக்களுக்காக ஒரு நிதி இருக்க வேண்டும் என்ற ஆலோசனைகளையும் கொடுக்கின்றனர். இது அவர்களின் அறியாமையாகும். அல்லாஹ்வின் அருளால் நான்காவது கிலாஃபத்தின் காலத்திலிருந்து அந்த நிதி அமைப்பு நம்மிடம் இருந்து வருகிறது. அதன் பெயர் **ஸய்யதுனா பிலால் ஃபண்ட்** என்பதாகும். இந்த ஃபண்ட் குறித்து எனது காலத்தில், ஒரு ஈத் குத்பாவிலும், ஒரு ஜுமுஆ குத்பாவிலும் இருமுறை தெளிவாக கூறியும் உள்ளேன்.

இந்த ஃபண்டிலிருந்து அல்லாஹ்வின் அருளால் உயிர்த்தியாகிகள் கவனத்தில் கொள்ளப்படுகிறார்கள். அவர்களுள் எவருக்கு தேவையிருக்குமோ அவர்களின் தேவைகள் நிறைவேற்றித் தரப்படுகின்றன. அந்த மாதிரி ஒரு ஃபண்டில் போதுமான அளவு பணம் இல்லா விட்டால் கூட உயிர்த்தியாகிகளை கவனிப்பது ஜமாஅத்தின் கடமையாகும். அல்லாஹ்வின் அருளால் இன்ஷா அல்லாஹ் நாம் அவர்களை பராமரித்து வருவோம்.

எனவே எவராவது உயிர்த்தியாகிகளுக்காக ஏதாவது கொடுக்க விரும்பினால் ஸய்யிதுனா பிலால் ஃபண்ட் இருக்கிறது. அந்த ஃபண்டில் பணம் செலுத்தலாம்.

இன்று எல்லாரையும் விட **முதலில் மதிப்பிற்குரிய முனீர் அஹ்மத் சேக் சாஹிப்** பற்றி கூறுகிறேன்.

இவர் தாருஸ் ஸிக்ரில் ஷஹீதாக்கப்பட்டார்கள். லாஹுரின் மாவட்ட அமீர் ஆவார். ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த இவரது தந்தையார் முகர்ரம் சேக் தாஜுத்தீன் சாஹிப் ஆவார். ஜலந்தரில் இருந்த இவரது தந்தையார் 1927 –ல் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார். இவருக்கு மலிக் ஸைஃபுர் ரஹ்மான் சாஹிபுடன்

நட்பு இருந்தது. இருவரும் ஆரம்பத்தில் அஹ்மதிய்யத்திற்கு பெரும் எதிரியாக இருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய புத்தகங்களைப் படித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெருமைகளைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதிய கவிதைகளைப் படித்தனர். பிறகு நல்ல ஆர்வம் ஏற்பட்டது. இன்னும் சில நூல்களைப் படித்ததும் இந்த இரு பெரியவர்களின் உள்ளங்களும் தூய்மையடைந்தன. இந்த (ஷஹீதான) சேக் முனீர் அஹ்மத் சாஹிப் சேக் தாஜுத்தீன் சாஹிபுடைய மகன் ஆவார். L.L.B. படித்தவர். படிப்பு முடித்த பிறகு சிவில் ஜட்ஜ் ஆனார். பல இடங்களில் இவருக்கு போஸ்டிங் போடப்பட்டது. செஸன் ஜட்ஜ் -லிருந்து பதவி உயர்வு பெற்று லாஹுரில் லஞ்ச ஒழிப்பு பிரிவின் சிறப்பு நீதிபதி ஆக நியமிக்கப்பட்டார். Custom Special Judge ஆகவும் பணி செய்தார். நல்ல முறையில் பணியாற்றிய பிறகு 2000-ல் பணி ஓய்வு பெற்றார். அவரது நீதியை விரும்பும் மனப்பான்மை அவர் வேலை செய்த எல்லா இடத்திலும் மிகவும் பிரபல்யமாக இருந்தது. எப்போதும் பயப்படுவதில்லை. ராவல்பிண்டியில் ஒரு வழக்கில் இரு தரப்பில் ஒருவர் லாஹுரி அஹ்மதிப் பெண் ஆக இருந்தார். அவரது வகீல் முஜீபுர் ரஹ்மான் சாஹிப். எதிர் தரப்பு ஒரு மவ்லவியாக இருந்தார். நீதிமன்றத்தில் நீதிபதி ஆசனத்தில் அமர்ந்ததுமே முனீர் அஹ்மத் சாஹிப் கூறினார்: நான் அஹ்மதி தான். உங்களுக்கு ஆட்சேபணை இருந்தால் தெரிவிக்கலாம். எதிர் தரப்பாகிய மவ்லவிகளின் பிரிவிற்கு லாஹுர் பார்ட்டியுடன் வழக்கு இருந்தது. அத்தரப்பும் கூட, ‘உங்களிடம் இருந்து தீர்ப்பை பெறுவதில் எமக்கு சம்மதம்’ என்று தெரிவித்தனர். அவர்களின் வகீல் லாஹுரி பிரிவைச் சேர்ந்த ஓர் அஹ்மதியான முஜீபுர் ரஹ்மான் சாஹிப் ஆவார். அந்த வகீல் கூறினார். நாங்கள் லாஹுர் பார்ட்டி என்பதால் எங்களுக்கு எதிராக தீர்ப்பு வழங்கி விடுவீர்களோ என்ற பயம் இருந்தது. ஆனால் நீங்கள் நீதியை மேற்கொண்டீர்கள் என்றார். அதாவது தீர்ப்பு லாஹுர் பார்ட்டியைச் சேர்ந்த பெண்ணுக்கு சாதகமாகவும், மவ்லவிகளுக்கு பாதகமாகவும் அமைந்தது.

அவரது அறிவு மிகவும் பரந்ததாகவும் தீர்ப்பளிக்கும் ஆற்றல் வலிமை வாய்ந்ததாகவும் இருந்தது. பணியாளர்கள், ஏழைகள் மீது அனுதாபம் காட்டக் கூடியவர். தர்வேஷ்களைப் போன்று பண்பு கொண்டவர். எளிமை வாய்ந்தவர். நானும் அவரை பார்த்திருக்கிறேன். ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனின் டைரக்டராகவும் இருந்தார்.

மாரட் டவுண் பகுதியின் ஸயீமாகவும், கார்டன் டவுண் பகுதியின் தலைவராகவும் இருந்தார். ஜமாஅத் பொறுப்புகளை ஆரம்பத்திலிருந்து வகித்து வந்தார். இவரது மனைவி கூறுகிறார். இவர் குழந்தைகளை நன்கு பராமரித்து வந்தார்கள். நான் ஒரு ஏழை Station Master -ன் மகன் ஆவேன். ஆனால் நீங்கள் உங்களை செஸன்கோர்ட்டின் நீதிபதியின் பிள்ளைகள் என்று உங்களை கருதுவதால் உங்களை நான் அதிகமாக கவனிக்க வேண்டியுள்ளது என்று தமது பிள்ளைகளைப் பார்த்து கூறுவார்கள்.

வஸிய்யத் திட்டத்திலும் இணைந்திருந்தார். நான ஏற்கனவே கூறியது போன்று தாருஸ் ஸிக்ர் மஸ்ஜிதில்தான் அவர்களது ஷஹாதத் நடந்துள்ளது. ஷஹாதத்திற்கு ஒரு நாள் முன்பு லஜ்னா அமைப்பைச் சேர்ந்த இவரது தங்கை, வஸிய்யத்தும் சொர்க்கத்தைப் பெறும் ஒரு வழியாகும் என்று கூறியதை சேக் சாஹிபிடம் குறிப்பிட்டு, நான் கூறியது சரிதானே? என்று கேட்டார். அப்போது சேக் சாஹிப், நீர் சொன்னது சரி தான். ஆனால் ஜன்னத்திற்கு அசல் உத்தரவாதம் ஷஹாதத் மூலமே கிடைக்கறது என்று கூறினார்.

சேக் சாஹிபுடைய மனைவி கூறுகிறார். ஷஹாதத்திற்கு முன் அவரது போன் வந்தது. தலையிலும் காலிலும் காயம் ஏற்பட்டுள்ளது. நான் நன்றாக இருக்கிறேன் என்று உரத்த குரலில் கூறினார். கீழ்த்தளத்திற்குச் செல்லுமாறு ஒரு குத்தாம் கூறியபோது மறுத்து விட்டார். துப்பாக்கிச் சூடு தொடங்கியதும் இரு கையையும் உயர்த்தி மக்களை உட்காருமாறு அமர்த்தினார்கள். தரூது ஓதுமாறும் துஆ செய்யுமாறும் கூறினார். அவரிடம் போன் இல்லை. ஒரு காதிமிடம் போனை வாங்கி வீட்டிற்கும், போலீஸிற்கும் போன் செய்தார். போலீஸ் நாங்கள் வந்து விட்டோம் என்று பதில் கூறியது. பின் எதற்காக உள்ளே வரவில்லை? என்று அவர்களிடம் மிகக் கோபத்துடன் கேட்டார். அவருக்கு போனைக் கொடுத்த ஒரு காதிம் அவரது கடைசி குரலைக் கேட்டார். அது அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதாகவே இருந்தது.

அவரது மனைவி கூறுகிறார்: ஜுமுஆ தொழுகைக்குச் செல்லுமுன் என்னிடம் அவர் சந்தா பணத்தை கொடுத்து விட்டு இதை வைத்துக் கொள் என்று கூறினார். இதற்கு முன் இப்படி அவர் தந்ததில்லை. எனவே நான், முன்னர் நீங்கள் தான் வைத்திருந்தீர்கள். இப்போதும் நீங்களே வைத்திருங்கள் என்று கூறினேன். அப்போது அவர், இன்று நீங்கள் (மனைவி) வைத்திருங்கள். அலுவலகம் மூடி விட்டதால் சந்தா கொடுக்க முடியாது என்று கூறினார்.

அதேபோன்று அவர் மனைவி கூறிய இன்னொரு செய்தி, ஒரு கேஸ் சம்பந்தமாக இந்த வழக்கின் தேதி தள்ளிப்போடப்பட்டுள்ளது. எனவே இது வழக்குக்கான பணம். இதை இந்த தரப்பிடம் ஒப்படைத்து விடு. இது அவர்களது கோப்பு என்று கூறினார். இதற்கு முன் இதுபோன்று எந்த வழக்கு சம்பந்தமாகவும் என்னிடம் கலந்தாய்வு செய்ததில்லை.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம், பணி ஓய்வு பெற்ற பிறகு இரண்டு முறை எனது வக்ஃபை ஒப்புக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தார். நீங்கள் இப்போது செய்து வரும் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருங்கள். உங்கள் மூலமாக நல்ல முறையில் இப்போது கூட தப்லீக் நடந்து கொண்டிருக்கிறது என்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறினார்கள். அஹ்மதி அதிகாரிகள் எப்படி இருப்பார்கள் என்பது மக்களுக்கு தெரியட்டும் என்றும் கூறினார்கள்.

அவரது ஒரு மகன் கூறினார். உங்களுக்கு மெய்க்காப்பாளர் வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அவர், அது வைத்திருந்தால் என்ன ஆகும்? குண்டு பாய்ந்தால் **ஷ**ஹீதாகத்தான் போகிறேன்! என்று கூறினார்.

நமது முபல்லிக் முப**ஷ்ஷி**ர் மஜீத் சாஹிப் இவரைப் பற்றி ஒரு சம்பவம் எழுதியுள்ளார்:

1997 அல்லது 1998 ஆம் வருடத்தில் நடந்த ஒரு சம்பவம். லாஹூர் குல்பர்க்கில் கொள்கைப்பரப்புனராக இருந்த போது மாவட்ட கொள்கைப்பரப்புனரிடம் இருந்து ஜமிய்யத்துல் உலமா பாகிஸ்தானில் உயர் பதவி வகிப்பவரான அஹ்மதி அல்லாத ஓர் ஆலிமை நாங்கள் சந்திக்கப் போகிறோம் என்று கூறி போன் வந்தது. எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. அவரைப் போய் சந்திக்கிற தொல்லை இவருக்கு எதற்கு வந்தது? என்று தோன்றியது. சரி; நானும் மாவட்ட முரப்பி சாஹிபுடன் சென்றேன். ஜமிய்யத்தினுடைய செயலகத்தை அடைந்ததும் அங்கிருந்தவர்களுடன் அறிமுகம் செய்யப்பட்டது. ஜமிய்யத்துல் உலமா பாகிஸ்தானின் செயலர் நமது பெரும் எதிரியாக இருந்தார். சுங்க இலாகாவில் முழுக்க முழுக்க என் மீது தவறான வழக்கை சுமத்தியுள்ளார்கள். ஜட்ஜாக இருப்பவரும் மிக மிக தீயவராக தெரிகிறார். மூன்று முறை விசாரனைக்காக இவரிடம் வந்துள்ளேன். வழக்குமன்றத்திற்குள் வந்து ஆசனத்தில் அமர்ந்ததும் மிகவும் பலமாக மேஜையின் மீது தட்டி விட்டு Listen Eveybody நான் அஹ்மதி. வழக்கை ஆரம்பியுங்கள் என்று கூறுகிறார் என்று எங்களிடம் முறையிட்டனர்.

(ஜமிய்யத்துல் உலமா பாகிஸ்தான் செயலரான) இந்த சாஹிப் கூறுகிறார். இவரது கடுமையான எச்சரிக்கை கேட்டு எனது பாதி உயிர் போய் விட்டது. எனது பிடியில் மாட்டிக் கொண்டுள்ளீர்கள். இப்போது நான் உங்களை விடமாட்டேன் என்று கூறுகிறாரா என்று தோன்றியது. அல்லாஹ்வுக்காக எனக்கு உதவி செய்யுங்கள் என்றார். இவர் மார்க்கரீதியான வேறுபாட்டை வைத்து எனக்கு தண்டனை தருவார்போல் தெரிகிறது என்று நமது முரப்பி சாஹிபிடம் அந்த வழக்காளி கூறினார்.

உடனே நமது முரப்பி சாஹிப் கூறினார். நீங்கள் அந்த (அஹ்மதி) ஜட்ஜின் தூதுச் செய்தியை விளங்கவில்லை. நான் அஹ்மதி என்று மேஜை தட்டி கூறக்காரணம் உங்களை மிரட்டுவதற்கல்ல. மாறாக, அவர் அவ்வாறு கூறக்காரணம், கேளுங்கள். நான் அஹ்மதி. நான் லஞ்சம் வாங்குவதில்லை. யாருக்கும் பரிந்துரையும் செய்வதில்லை. அல்லது பாரபட்சமாக எந்தத் தீர்ப்பும் நான் வழங்கவில்லை. நான் இறைவனுக்கு மட்டுமே பயப்படுவேன். இதுவே அவர் கூறியதன் பொருளாகும். எனவே எங்கள் மீது கருணை காட்டுங்கள். எந்த சிபாரிசும் செய்யுமாறு எங்களை நிர்ப்பந்திக்காதீர்கள். எப்போதும் இதுபோன்ற பரிந்துரை செய்ய முடியாது.

முரப்பி சாஹிப் கூறுகிறார்: அம்மனிதர் மிகவும் சங்கடத்துக்கு உள்ளானார். நான் அவரிடம் கூறினேன். உங்கள் பக்கம் தவறு இருக்கும் எனில் தண்டனை கிடைக்கும். ஆனால் மார்க்க கருத்து வேறுபாடு காரணமாக நிச்சயமாக தண்டனை தரமாட்டார். இதற்கு பிறகு நாங்கள் சென்று விட்டோம். இதற்கு 5-6 மாதங்களுக்குப் பிறகு அந்த மனிதரின் P.A.விடமிருந்து போன் வந்தது. கண்ணியமான முறையில் அந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்ற செய்தியை உங்களிடம் கூறச் சொன்னார். உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறார். அப்போது நமது முரப்பி சாஹிப் கூறினார். நீங்கள் எங்களுக்கு நன்றி செலுத்த வேண்டிய அவசியமில்லை. இமாம் மஹ்தி - இறுதிக் காலத்தின் இமாமாக வந்தவருக்கு நன்றி செலுத்துங்கள். அந்த மனிதர் ஒரு ஜமாஅத்தை உருவாக்கியுள்ளார். இன்று உலகிலிருந்து துடைக்கப்பட்ட நல்லொழுக்கங்களை மீண்டும் உருவாக்குவதற்காக வந்துள்ளார்கள்.

இதுவே (அந்த நீதிபதியாக முனீர் அஹ்மத் சாஹிப் ஷஹீதின்) நீதியின் தரமாகும். நல்ல துணிச்சல்மிக்கவர். சென்ற வருடம் நான் இவரை லாஹுர் ஜமாஅத்தின் அமீராக நியமித்தேன். உங்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் நேரடியாக என்னிடம் கேட்கலாம். என்னுடன் நிச்சயமாக தொடர்பு கொள்ளுங்கள் என்று அவரிடம் தெரிவித்திருந்தேன். ஒருமுறை போன் வந்தது. தாங்கள் எனக்கு அளித்த அனுமதியிலிருந்து பயன்பெற்றவாறு நான் போன் செய்து உங்களிடம் வழிகாட்டல் பெறுவேன். மற்றபடி நல்ல முறையில் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஸலாமும் கூறிக் கொள்கிறேன் என்றார். எளிமையானவர். பணி செய்பவர்களுடன் ஒத்துழைத்துச் செல்பவர். லஜ்னா சதர் சாஹிபா கூறினார். மக்களுக்கு அதிகமாக அறிமுகமில்லாத ஒருவரை தாங்கள் லாஹுரின் அமீராக நியமித்துள்ளீர்கள் என்று முதலில் நினைத்தோம். அவர் பணி செய்வதை பார்த்ததும், இவர் பணிக்குரிய கடமையைச் செய்துள்ளார் என்று தோன்றுகிறது. எண்ணற்ற நற்பண்புகளுக்குச் சொந்தக்காரர் ஆவார். அல்லாஹ் தமது அன்பிற்குரியவர்களின் இடத்தில் இவருக்கு இடமளிப்பானாக!

**இரண்டாவது ஷஹீது** சியால்கோட் மாவட்டத்தைச் சேர்ந்த **மேஜர் ஜெனரல் (ஓய்வு) நாஸிர் சவுத்ரி சாஹிப்.** சவுத்ரி சஃப்தர் அலி சாஹிப் அவர்களின் மகன் ஆவார்.

இவரது தந்யைார் இன்ஸ்பெக்டராக இருந்தார். 1930 -ல் பணியின் வேளையில் தான் இவரது தந்தையும் ஷஹீத் ஆனார். அப்போது ஜெனரல் சாஹிபின் வயது 10 தான் இருக்கும். ஜெனரல் சாஹிபின் தந்தை வழிப்பாட்டி ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் பாலூட்டிய தாயார் ஆவார். 1942 -ல் இவர் பதவி உயர்வு கிடைத்து பங்களூருக்குச் சென்றார். இரண்டாவது உலகப்போரில் பர்மாவின் Frontier Force -ல் மஹாஸ் ஆக இருந்தார். 1943 -ல் திருமணம் நடந்தது. ஸய்யத் சர்வர் ஷாஹ் சாஹிப் இவரது நிகாஹ்வை நடத்தினார். எனது நிகாஹ் வைபவத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் (ரலி) அவர்கள் இருவரும் கூட கலந்து கொண்டனர் என்று இவர் கூறியுள்ளார்.

இராணுவத்தில் பல முன்னேற்றங்களைப் பெற்றார். 1971 -ல் ராஜஸ்தானில் பணி செய்த போது கால் முட்டியில் குண்டடிபட்டது. தோட்டா உடம்புக்குள் இருந்தது. அதை அகற்ற முடியவில்லை. இந்த தாக்குதல் நடந்த வேளையில் இவர்களது Personal Secretary -ம் காயமடைந்தார். அந்தச் செயலரை ஹெலிகாப்டரில் ஹைதராபாத் அனுப்பினார். தாம் மட்டும் இரயிலில் ஹைதராபாத் வந்து சேர்ந்தார். இவர் திரும்ப எழுந்து நடந்தால் அது பெரிய அற்புதமான நிகழ்வாகத்தான் இருக்கும் என்று டாக்டர் கூறினார். பிறகு குண்டு அகற்றப்பட்டது. தோட்டாவை எடுத்தால் அது இன்னும் சில சிக்கலை ஏற்படுத்தி விடும். எனவே தோட்டாவை வெளியில் எடுக்கவில்லை.

நல்ல உறுதியானவர். உடற்பயிறசி செய்து வந்தார். இவரது கால் இறையருளால் நன்கு வேலை செய்தது. A கேட்டகரியை தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். ஏனென்றால் B கேட்டகரியில் ஒரு வேலைக்காரரை வைத்துக் கொள்ள அனுமதி உண்டு. லாஹுர் மாவட்டத்தில் 20 வருடமாக இஸ்லாஹ்-வ-இர்ஷாத் செயலராக இருந்தார். 1987-ல் இருந்து ஷஹீதாகும் வரை மார்டன் டவுணின் ஹல்கா சதர் ஆக இருந்தார். ஷஹாதத்தின் போது அவரது வயது 91. அல்லாஹ்வின் அருளால் மூஸி ஆக இருந்தார். மார்டன் டவுணில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது.

இவரது மனைவி கூறுகிறார்: மிகவும் தூய்மையானவராகவும், கிலாஃபத்தின் மீது பற்று கொண்டவராகவும் இருந்தார். தொழுகையைப் பேணுபவராகவும் ஜமாஅத்தின் மீது மிகவும் அக்கறை கொண்டவராகவும் இருந்தார். ஆரம்ப காலத்தில் 1943 -லிருந்தே வஸிய்யத்தில் இணைந்து விட்டார்.

லாஹூர் மாவட்டத்தின் நாயிப் அமீர் **மேஜர் லத்தீப் அஹ்மத் சாஹிப்.**

இவரும் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர் ஆவார். மேஜராகவும் இருந்தார். மேஜர் சவுத்ரி சாஹிப் ஷஹீது இராணுவத்தில் ஜெனரலாக இருந்தவர் ஆவார். அதனை வைத்து மேஜர் லத்தீப் அஹ்மத் சாஹிப் நகைச்சுவையாக எனக்குக் கீழ் இராணுவத்தின் ஜெனரல் வேலை செய்கிறார். என்று கூறுவதுண்டு. ஏனெனில் மேஜர் சாஹிப் நாயிப் அமீராக இருந்தார். அப்போதெல்லாம் சிரித்துக் கொண்டே சவுத்ரி சாஹிப் எனது வேலை கட்டுப்படுவதுதான் - நான் அஹ்மதி ஆவேன். ஜமாஅத்திற்காக வேலை செய்கிறேன். பிறகு மேஜர், ஜெனரல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறுவார்.

மஸ்ஜித் நூர் என்ற மார்டன் டவுண் பள்ளிவாயிலில் எப்போதும் ஹாலுக்கு வெளியில் நாற்காலியில் அமர்ந்திருப்பார். சுடப்பட்ட அந்த நாளிலும் ஒரு அஹ்மதி அவரை உள்ளே வருமாறு கூறினார். எல்லாரையும் முதலில் உள்ளே அழைத்துச் செல்லுங்கள் என்று கூறி இறுதியில் தான் சென்றார். ஹாலின் கடைசிப் பகுதியின் நாற்காலியில் அமர்ந்து கொண்டார்கள். பிறகு மக்கள் ஒரு அறையின் பக்கம் சென்றனர். இவரை அழைத்துச் செல்ல விரும்பினர். அவர் கூறினார்: என்னை இங்கேயே விட்டு விடுங்கள். அதே நேரத்தில் தீவிரவாதிகள் ஒரு குண்டை வீசினர். அது அவரது காலுக்குக் கீழ் வெடித்தது. அதில் இவர் அருகிலிருந்த பெரியவரும் கீழே விழுந்தார். அதற்குப் பிறகு எழுந்து நாற்காலியில் உட்கார்ந்தார். தொடர்ந்து தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தினர். ஒரு தோட்டா இவரது கழுத்தில் பாய்ந்தது. நாற்காலியில் அமர்ந்தவாறே சஜ்தாவின் நிலையில் (தலையை குனிந்த நிலையில்) ஷஹீதானார்.

மிகவும் எளிய முறையில் விசுவாசத்துடன் ஜமாஅத்திற்கு தொணடு செய்யக் கூடியவர். பைஅத் நிபந்தனைகளை நிறைவேற்றியவர். இராணுவத்தில் பல நெருக்கடியான பல சூழ்நிலைகளை சந்திக்கும் போது இவருக்கு -ஹாதத்தின் பதவி கிடைத்திருக்கலாம். ஆனால் இறைவனுக்கு ஒவ்வொரு நல்லடியாரின் விஷயத்திலும் ஒவ்வொரு விதமாக நடந்து கொள்ளப் பிடிக்கும். இவரது விஷயத்தில் இவருக்கு ஷஹாதத்தின் பதவியைக் கொடுத்தான். எனினும் முஹம்மதிய மஸீஹின் தொண்டன் என்ற முறையில் மேலும் இபாதத் செய்யும் சூழ்நிலையில் தர விரும்பியுள்ளான். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

**அஸ்லம் பர்வானா சாஹிப் ஷஹீத்.** இவர் மெஹர் ராஜா கான் பர்வானா சாஹிபின் மகன் ஆவார். ஷஹீத் மர்ஹூமின் தந்தையார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் போது பைஅத் செய்தார். ஜங்க் பகுதியைச் சார்ந்தவர். டெக்ஸ்லா University -ல் Mechanical Engineering படித்தவர். 1981 முதல் பாகிஸ்தான் இரயில்வேயில் பணி செய்தார். மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் தொண்டராவார். சம்பவ நாளன்று பள்ளிவாசலில் நின்று கொண்டு அறிவிப்பு செய்து அப்போதுதான் முடித்திருந்தார். பொதுவாக அவர் தான் அறிவிப்புகள் செய்வார். இவரது வயது 59. இவரது ஷஹாதத் தாருஸ் ஸிக்ரில் நடந்தது.

பாகிஸ்தான் இரயில்வேயில் Chief Engineer - Mechanical Engineering -ல் 20வது Grade Office ஆவார். 21வது Grade -ற்காக இவரது கோப்புகள் தொகுக்கப்பட்டிருந்தது. விரைவில் பதவி உயர்வு பெற இருந்தார். ஆனால் அல்லாஹ் மிகப்பெரும் பதவி உயர்வை வழங்கினான். அதற்கு முன் அவர் பெறவிருந்த Grade -கள் ஒன்றுமேயில்லை. இவரைப் பற்றி டியூட்டியில் இருந்த காதிம் கூறுகிறார்:

முகர்ரம் அஸ்லம் பர்வானா சாஹிபை Underground -ற்கு அழைத்துச் செல்ல முயற்சி செய்யப்பட்டது. ஆனால் மறுத்து விட்டார். மற்றவர்களை கீழ் தளத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். நான் இங்கேயே இருப்பேன் என்று கூறி ஹாலை விட்டு வெளி வளாகத்திற்கு வந்து மற்றவர்களை எச்சரிக்க விரும்பினார். கதவைத் திறந்ததும் எதிரில் தீவிரவாதிகள் நின்று சுட்டுவிட்டனர். ஷஹீத் மர்ஹூம் பொதுவான ஜமாஅத் பொறுப்பில் இருந்தார். ராவல்பிண்டியின் முன்னாள் காயிதாகவும், லாஹூரின் காயிதாகவும் இருந்தார். அது தவிர புதிய அஹ்மதிகளுக்கு தர்பிய்யத் வழங்கும் செயலராகவும், லாஹூரின் சொத்து செயலராகவும்,

லாஹுரின் கபருஸ்தான் கண்காணிப்பாளர் என பல பொறுப்புகளை வகித்து வந்தார். இரவு பகலாக பணி செய்பவர். வீரமிக்கவர்.

கொயிட்டாவில் இவர் பணி செய்த போது ஜியாவுல் ஹக் அங்கு வருகை தந்திருந்தார். அப்போது ஜியாவுல் ஹக் பாகிஸ்தானின் அதிபராக இருந்தார். இவர் இரயில்வே ஆபீஸராக இருந்ததால் அவருக்கு முன் உட்காரும் வாய்ப்பு கிடைத்தது. விழாவில் முதல் அணியில் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது அஹ்மதிகளுக்கு கலிமாவை எழுதுவது, கலிமாவை சொல்வது கூடாது என்ற தடைச்சட்டம் அமலில் இருந்தது. இவர் கலிமா பேட்ஜ் அணிந்தவாறு ஜியாவுல் ஹக் முன்னால் உட்கார்ந்திருந்தார். நீங்கள் பின் சீட்டிற்கு போய் விடுங்கள். அல்லது கலிமா பேட்ஜை கழற்றி விடுங்கள் என்று கவர்னர் இவருக்கு தூது அனுப்பினார். நான் கலிமா பேட்ஜை கழற்றவும் மாட்டேன் அல்லது பயந்து கொண்டு பின்னால் போகவும் மாட்டேன் என்று கூறினார். வேண்டுமானால் என்னை நீங்கள் வேலையை விட்டு நீக்கி விடுங்கள் என்று கூறி அங்கேயே உட்கார்ந்திருந்தார்கள். சோதனையின் காலத்தில் லாஹுரின் காயிதாக இருந்தார். நிலைமைகளுக்கு ஏற்ப அஹ்மதி இளைஞர்களை தயார் செய்தார். தானும் நீண்ட காலம் Gate –ல் டியூட்டி கொடுத்து வந்தார். மிகவும் சேவை மனப்பான்மை உள்ளவர் ஆவார்.

ஷஹீது மர்ஹூமின் மனைவி கூறுகிறார்: கிலாஃபத்தின் மீதும் ஜமாஅத்தின் மீதும் பேரன்பு கொண்டவர். ஜமாஅத் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி வந்தார். வாழ்வை ஜமாஅத்திற்கு அர்ப்பணிப்பதில் மகிழ்ச்சி அடைந்தார். ஓய்வுக்குப் பிறகு வாழ்வை ஜமாஅத்திற்கு அர்ப்பணித்தார். ஜமாஅத்திற்கு வக்ஃப் செய்துள்ளோம். ஜமாஅத் பணிகளுக்கு பயன்பட வேண்டும் என்பதற்காகவே தேக ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவார். ஜமாஅத்துடன் தொழுவதில் கவனம் உள்ளவர். நேர்மையான அதிகாரி. எனவே எல்லா இடத்திலும் அவருக்கு மரியாதை கிடைத்தது. ஜமாஅத் செலவில் இவர் படித்தார். இவரது செலவுகள் அனாதைகளின் பராமரிப்பு நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டது. எனவே அனாதைகள் நிதிக்கு தமது சந்தாவை வழங்கி வந்தார். மற்ற சந்தாக்களையும் வழங்கி வந்தார். ஷஹீது மர்ஹூமின் உறவினர் ஒருவர் 'ஷஹீதுகளை தேர்ந்தெடுக்க தயாராகுங்கள்' என்று கூறப்படுவதாகக் கனவில் கண்டார். இவர் மிகவும் எளிமையான மனிதர். இவரை நான் கண்டுள்ளேன். இறைவன் இவரது தகுதியை உயர்த்துவானாக.

அஷ்ரப் பிலால் சாஹிப் –ஹீத். இவர் லதீஃப் சாஹிபின் மகன் ஆவார். இவரது பல உறவினர்கள் ஜமாஅத்திற்கு வெளியில் உள்ளனர். இவரது தாயாரின் தந்தை முகர்ரம் குதா பக்ஷ் சாஹிப் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கையில் பைஅத் செய்தவர். இங்கிலாந்தின் குடியுரிமை பெற்றவர் ஆவார். அந்நாட்களில் பாகிஸ்தான் வந்திருந்தார். பொருள் தியாகத்தில் பங்கு கொண்டார். மார்டன் டவுனில் பைத்துஸ் ஸிக்ர் பள்ளிவாயிலை ஜமாஅத்திற்கு கட்டித்தரும் வாய்ப்பு பெற்றார். இவருடைய தொழில் Engineering உடன் சம்பந்தப்பட்டது. ஒரு தொழிற்சாலை இவருக்கு இருந்தது. ஷஹாதத்தின் போது இவருக்கு வயது 56. அல்லாஹ் இவருக்கு தஹ்ரீகே ஜதீத் செயலராக இருந்து ஜமாஅத் பணிகளும் செய்ய வைத்தான்.

தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நடந்தது. இவர் மூஸி ஆவார். இவர் உறுதியுடன் கைப்பையில் கையை விட்டு போனை எடுத்து டிரைவிடம் எனக்கு குண்டு அடிபட்டுள்ளது. ஆனால் யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று கூறினார். ஒரு குண்டு இவரது கழுத்தில் பட்டது. நிஸார் அஹ்மத் என்ற பெயருடைய ஒரு பையன் சிறு வயது முதலே இவருடன் வாழ்ந்து வந்தான். அவரைப் பார்த்தவர்கள், இவர் கீழே விழும் போது அந்தப் பையன் அவரை தனது கையால் தாங்கிப் பிடித்துக் கொண்டான் என்று கூறினர். வீழ்ந்து கிடந்தவரை அந்த பையன் வேறொரு பகுதிக்கு எடுத்துச் சென்றான். அவர் பாதி மரணித்த நிலையில் இருந்தார். பையன் அவரது தலையை உயர்த்தி அவரது மார்பின் துடிப்பைக் கேட்க முயற்சி செய்த போது, தீவிரவாதி இன்னொரு குண்டால் நிஸார் அஹ்மத் என்ற அந்த சிறுவனையும் ஷஹீதாக்கினான். அந்த பையன் தானும் ஷஹீதாகி தனது விசுவாசத்தை காட்டியவாறு சென்று விட்டான். எப்போதும் இஸ்திக்ஃபார், திக்ரே இலாஹியில் மூழ்கியிருப்பார். தொழுகையில் ஆர்வம் உள்ளவராகவும் இருந்தார்.

இவரது மனைவி கூறுகிறார்: நான் கேட்கும்போதெல்லாம் நான் எதற்கும் தகுதியானவன் அல்ல. நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறேன் என்றே கூறுவார். பொருள் தியாகம், படைப்பினங்களுக்கு சேவை செய்தல் ஆகியவற்றில் மிகவும் ஆர்வம் உள்ளவர். ஒவ்வொரு மாதமும் பல இலட்ச ரூபாய் படைப்பின சேவைகளுக்காக செலவு செய்வார். Free Dispensary நடத்தி வந்தார். பலருக்கு மாதாமாதம் செலவுக்கு பணம் கொடுத்து வந்தார். எவராவது அவரிடம் உதவி கேட்டு வந்தால் வேறு எவரிடமும் போக வேண்டாம். என்னிடமே தேவைப்படும் போது வந்து வாங்குங்கள் என்பார்.

அவரது மனைவி கூறுகிறார்: அஷ்ரப் சாஹிபுடைய நடவடிக்கைகள் கடந்த இரு மாதங்களாக மிகவும் வித்தியாசமாக இருந்தன. எந்த வேலையையும் விரைவாக செய்து முடித்து வந்தார். என்னிடம் அறிவுரை கூறினார். ஒரு பணிப்பெண் வைத்து இங்குள்ள வேலையை முடித்து விடு. நாம் விரைவில் அவனையும் கூட்டிக் கொண்டு (பிரிட்டன்) செல்ல வேண்டும் என்றார். ஷஹாதத்தின் 15 நாட்களுக்கு முன் பல்வேறு வேலைகளைக் குறித்து இதனையெல்லாம் முடிக்க வேண்டும் என்று எனக்கு அறிவுறுத்தினார். இதனையெல்லாம் என்னால் செய்ய முடியாது என்று நான் கூறினேன். அதற்கு அவர் இல்லை. உன்னால் இது முடியும் என்றார். அல்லாஹ் இவரது தகுதிகளை உயர்த்துவானாக.

**கேப்டன் (ஓய்வு) மிர்ஸா நயீமுத்தீன் சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் சிராஜுத்தீன் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது அவர்கள் பதேஹ்பூர், குஜ்ராத் மாவட்டத்தைச் சார்ந்தவர். குடும்பத்தில் முதன் முதலில் இவரது தந்தை வழிப்பாட்டனார் பைஅத் செய்திருந்தார். மிர்ஸா முஹம்மத் அப்துல்லாஹ் சாஹிப் தர்வேஷ் காதியான் அவர்கள் ஷஹீதின் பெரியப்பா ஆவார்கள். ஷஹாதத்தின் போது இவரது வயது 56. தாருஸ் ஸிக்ரில் ஷஹீது ஆனார்கள். ஷஹீது மர்ஹூமின் மனைவி இவரது ஷஹாதத்தைப் பற்றி கூறும் போது குறிப்பிட்டார்.

ஜுமுஆ நாளன்று மகள் வீட்டில் உணவு உண்டார். காயமுற்ற நிலையில் இரண்டு மணி அளவில் வீட்டிற்கு போன் வந்தது. தாயாரை கவனித்துக் கொள்ளுமாறு மகளிடம் கூறினார். நான் போனை மகளிடமிருந்து வாங்கியதும், நன்றாக இருக்கிறாயா? என்று கேட்டார்கள். ஆம் என்றேன். அல்லாஹ் ஹாபிஸ் (இறைவனே போதுமானவன்) என்று கூறினார். மகன் ஆமிருடைய நிலை என்ன என்பதை கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். பள்ளிவாயிலில் இரண்டு பேருக்கு உயிர் தப்பிப்பதற்கான ராணுவ வழிமுறையைக் கற்றுக் கொடுத்தார்கள். அல்லாஹ்வின் அருளால் அவ்விருவரும் உயிரோடு இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் மிஹ்ராபுக்கு அருகில் உட்கார்ந்திருந்த நிலையில் ஷஹீதானார். இவரது வயிற்றில் குண்டடிபட்டிருந்தது. இவரது மகன் ஆமிரும் காயமுற்றுள்ளார். அல்லாஹ் அவருக்கு முழுமையான குணத்தை வழங்குவானாக. இவரது மனைவி கூறுகிறார்: எங்களது இரு குடும்பத்தாரின் குடும்ப வாழ்வு ஓர் முன்னுதாரணமானதாக இருந்தது. எங்களுக்கு ஐந்து மகள்கள் உள்ளனர். ஒவ்வொரு மகள் பிறக்கும் போதும் ரஹ்மத் (இறை அருள்) வந்துள்ளது என்று கூறுபவராக இருந்தார்.

தொடர்ந்து பெண் குழந்தைகள் பிறந்ததால் மனைவியை ஏசுபவர்களுக்கு இவரது வாழ்வு ஒரு முன்னுதாரணமாகும். ஏனெனில் இது மாதிரி புகார்கள் எனக்கு தொடர்ந்து வருகின்றன. ஒவ்வொரு மகளின் பிறப்புக்குப் பிறகு இவருக்கு முன்னேற்றம் கிடைத்தது. சிப்பாயாக இருந்தவர் கேப்டன் வரை உயர்ந்தார். நேர்மையானவராக இருந்ததால் மக்கள் இவருக்கு மிகவும் மரியாதை காட்டினார். நல்ல வீரமிக்கவர். 1971 –ன் யுத்தம், கார்கில் யுத்தம் போன்றவற்றில் பங்குபெற்று இருந்தார். ஷஹாதத்திற்கு பெரும் விருப்பம் இருந்தது. அவரது இந்த விருப்பம் இபாதத் செய்தவாறு நிறைவேறியது. அவருக்கு ஷஹாதத்தின் பதவியை அல்லாஹ் வழங்கினான்.

**காம்ரான் ரஷீத் சாஹிப்**. இவர் முஹம்மத் அஷ்ரஃப் கமர் சாஹிபின் மகன் ஆவார். இவரது தந்தை வழிப்பாட்டனார் முகர்ரம் ஹாபிஸ் முஹம்மத் அப்துல்லாஹ் சாஹிப் இவரது குடும்பத்தில் முதல் அஹ்மதி ஆவார். இவர் 1918 –ல் பைஅத் செய்தவர். நாடு பிரிவினையின் போது ஜலந்தர் மாவட்டத்திலிருந்து ஹிஜ்ரத் செய்து இங்கு வந்தார். ஷஹீதிற்கு ஷஹாதத்தின் போது வயது 38 ஆகும். தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தைப் பெற்றார். மர்ஹூம் ஷஹீத் B.A. படித்துள்ளார். கம்போஸிங் பணி செய்து வந்தார்.

குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தஃலீம் செயலராகவும் பணியாற்றினார். இதுமட்டுமின்றி M.T.A லாஹுரில் 1994 லிருந்து பணியாற்றி வந்தார். நூல்கள் பிரிவிலும் இதற்கு முன்பு பணியாற்றி வந்தார். அல்லாஹ்வின் அருளால் இவர் மூஸி (வஸிய்யத் செய்தவர்). இவரைப் பற்றி தெரிய வந்த செய்தி Firing ஆரம்பமானதும் வீரத்துடன் உயிரைப் பொருட்படுத்தாமல் M.T.A -வுக்காக காட்சிகளைப் பதிவு செய்யப் புறப்பட்டார். ஆனால் அவ்வேளையில் தீவிரவாதிகள் சுடும்போது அதில் சிக்கிக் கொண்டார். வீட்டிலுள்ளவர்கள் கூறுகின்றனர். மிகவும் சகிப்புத்தன்மை மிக்கவர். குழந்தைகளின் தொழுகைகளை கவனமாகக் கண்காணித்து வந்தார். கடந்த ஒரு மாதமாக தாருஸ் ஸிக்ர் பள்ளியின்ன் பணிகளில் மூழ்கி இருந்தார். ஷஹாதத்திற்கு 3-4 நாட்களுக்கு முன் வழக்கத்திற்கு மாற்றமாக மிகவும் மென்மையாகவும் மவுனமாகவும் காணப்பட்டார். திருக்குர்ஆன் ஓதாமல் வீட்டிலிருந்து வெளியேறமாட்டார். இவரைப் பற்றி இவரது தாயாரிடம் கேட்கப்பட்ட போது கூறினார்.

ஜுமுஆ நாளில் ஃபஜ்ருக்குப் பிறகு நான் ஒரு கனவில் பார்த்தேன். வீட்டில் திருமணம் நடக்கும் சூழ்நிலை இருப்பதாக கண்டேன். வீட்டிற்கு வெளியே தெருவிலும் அஹ்மதிப் பெண்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் என்னைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றனர். என்னை நெஞ்சோடு அணைக்கின்றனர். ஒரு பெண் எனக்கு மாலை அணிவித்து ஒரு தங்க பாக்கெட்டை தந்து விட்டு, நாங்கள் மருதாணி அணிந்து கொண்டோம். நீங்கள் எப்போது மருதாணி அணியப் போகிறீர்கள் என்று கேட்கின்றனர். வீட்டுக்குப் போய் மருதாணி அணிவேன் என்று நான் கூறுகிறேன். இது மர்ஹூமின் தாயார் கண்ட கனவு ஆகும்.

ஷஹீது மர்ஹூமின் சகோதரர் தாம் கண்ட ஒரு கனவு பற்றி கூறுகிறார்: கம்ரான் நிறைய பூக்களுக்கு மத்தியில் நிற்கிறார். ஷஹீதின் தாயார் நீண்ட காலம் தாருஸ் ஸிக்ர் கிளையின் லஜ்னா சதராக இருந்தார். இந்த சம்பவத்தின் போது ஷஹீதுடைய மாமா முஸஃப்பர் அஹ்மத் சாஹிப் அவர்களும் ஷஹீதாகி உள்ளார்கள். அல்லாஹ் இவர்களின் தகுதியை உயர்த்துவானாக.

**இஜாஸ் அஹ்மத் பேக் சாஹிப்.** முஹம்மத் அன்வர் பேக் சாஹிபின் மகன் ஆவார். இந்த ஷஹீது காதியானின் அருகிலுள்ள லங்கர்வால் என்ற சிற்றூரில் வாழ்ந்து வந்தார். தாயார் முஹம்மதி பேகம் உடைய உறவினர் ஆவார். ஷஹாதத்தின் போது இவரது வயது 39. மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுடன் தொடர்புள்ள இவர் தாருஸ் ஸிக்ரில் ஷஹீதானார்.

இவரது மனைவி இவரைப் பற்றி கூறுகிறார்:

இவருக்கு Urine infection இருந்தது. இரண்டு வருடமாக நோயுற்று இருந்தார். இரண்டு மாதத்திற்குப் பிறகு முதன்முறையாக இப்போதுதான் ஜுமுஆ தொழுகைக்காக சென்றார். ஜுமுஆவுக்கு முன்னர் மிக சிறப்பாக ஆயத்தம் ஆனார். இரண்டு மாதத்திற்குப் பிறகு தேக ஆரோக்கியம் சற்று கூடியிருந்தது. ஜுமுஆவுக்கு ஆயத்தமாகியவாறு, எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. நீங்கள் முன்பை விட நன்றாக உள்ளீர்கள் என்றேன். ஆனால் இறைவனுக்கு விருப்பம் வேறாக இருந்தது. மிகவும் எளியவராகவும், தவக்குல் உள்ள மனிதராகவும் இருந்தார். எப்போதும் அலட்டிக் கொள்ளாமல் இருப்பார். மிகவும் பொறுமையாளர். யார் என்ன பேசினாலும் அதற்கு எதிர்மறையாகப் பேசவோ, எதிராக செயல்படவோ மாட்டார். பிரைவேட் டிரைவிங் செய்து வந்தார். ஜெனரல் நாஸிர் சாஹிபின் டிரைவராக அப்போது வேலை செய்து வந்தார். அல்லாஹ் இந்த எல்லாரது தகுதியையும் உயர்த்துவானாக.

**மிர்ஸா அக்ரம் பேக் சாஹிப் ஷஹீத்.** இவர் மிர்ஸா முனவ்வர் பேக் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது அவர்கள் மிர்ஸா உமர் பேக் சாஹிபின் பேரர் ஆவார்கள். மிர்ஸா உமர் பேக் சாஹிப் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கையில் பைஅத் செய்தவர்கள். மிர்ஸா உமர் பேக் சாஹிப் காதியானிலிருந்து நாடு பிரிவினையின்போது ஹிஜ்ரத் செய்து இங்கு வந்தார். அய்யூப் அஃஸம் பேக் சாஹிப் ஷஹீதுடைய மாமா ஆவார்கள். இவரது மாமாவாகிய இந்த அய்யூப் அஃஸம் பேக் சாஹிப் ஷஹீது எனது கருத்தின்படி 1997-98 ல் ஷஹீதாக்கினார்கள்.

**ஷ**ஹாதத்தின் போது அக்ரம் பேக் சாஹிபின் வயது 58. மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் உறுப்பினர் இவர். தாருஸ் ஸிக்ரில் **ஷ**ஹீதாக்கப்பட்டார். குண்டு வீசப்பட்டதில் இவரது **ஷ**ஹதத் நிகழ்ந்தது.

இவரைப் பற்றி தெரிய வந்த விபரங்களாவன: இவர் தமது மகனுக்கு போன் செய்து நான் காயமுற்றுள்ளேன். எனக்காக துஆ செய்யுங்கள் என்றார். மனைவியிடம் சாதாரண காயம் தான் எனக்காக துஆ செய்யுங்கள் என்றார். ஃபர்ஹான் என்ற மூத்த மகனும் பள்ளியில் இவருடன் இருந்தார். அவரை தேடிக் கொண்டிருந்தார். தீவிரவாதிகள் சென்று விட்டார்கள் என்ற வதந்தியை நம்பி வெளியில் வந்ததால் அவருக்கு குண்டு அடிபட்டதோ என்று கருதினர். ஆனால் அவரது யூகம் தவறு. ஐவேளை தொழுகையில் மிகவும் கவனம் உள்ளவர். ஒவ்வொரு வருடமும் இஃதிகாப் இருப்பார். நேரத்தை மிகவும் பேணுபவர். இவரது மனைவி கூறுகிறார்: இவரின் காரணமாக எங்கள் வீடு கடிகார முள்ளின் மீது சென்று கொண்டிருந்தது. (அதாவது காலந்தவறாமல் எங்கள் பணிகள் நடந்து கொண்டிருந்தன).

பெரியவர்களை மதிப்பவர். குழந்தைகளின் மீது அன்பு கொண்டவர். தமது மருமகனிடம், இபாதத்தில் நான் பெற விரும்புகிற சுவை இன்னும் கிடைக்கவில்லை. ஏதோ குறை இருக்கிறது எனக் கருதுகிறேன் என்று கூறுவார். **ஷ**ஹீத் மர்ஹூம் சில நாட்களுக்கு முன் கண்ட கனவில், நான் ஏதோ பாலத்தின் மீது நடந்து கொண்டிருக்கிறேன். 7-8 அடி எடுத்து வைத்ததும் பாலம் முடிந்து விட்டது என்று கூறினார். எனது வாழ்வு இன்னும் கொஞ்சம்தான் எஞ்சியிருக்கிறது என்று அதற்கு விளக்கமும் சொன்னார். அல்லாஹ் அவருக்கு உயர்ந்த தகுதியை வழங்கி விட்டான்.

**ஷ**ஹீது மர்ஹூமின் மகள் கூறுகிறார்கள்: ஏதாவதொரு **ஷ**ஹாதத் செய்தியைக் கேட்டால், இதுபோன்ற வாய்ப்பு கிடைத்தால் நாமும் **ஷ**ஹீதாகி இருக்கலாமே என்று கூறுவார். இவர்களின் மாமா **ஷ**ஹீதான போது அந்தோ இந்த குண்டு எனக்கு பட்டிருக்கக் கூடாதா? என்று கூறினார்கள். திருமணத்திற்கு முன்பு **ஷ**ஹீது ஒரு கனவு கண்டார். நான் வீட்டில் வெளி முற்றத்தில் நிற்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னை மேல் மாடியிலிருந்து பார்க்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்து இது ஹுஸூர் (அலை) என்று கூறுகிறேன். கனவில் கஃபா இல்லத்தையும் தரிசித்தேன் என்று கூறியுள்ளார். **ஷ**ஹாதத்திற்கு சில நாட்களுக்கு முந்தைய கனவில் வெள்ளைச்சோறு உண்ணுவதாக கண்டார். கனவு விளக்கமளிப்பவர்களின் கருத்தின்படி, ஒருவரது ஆசை நிறைவேறுதல், தகுதி உயர்த்தப்படுதல் என்பது இதற்குப் பொருளாகும். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

**முனவ்வர் அஹ்மது கான் சாஹிப் ஷஹீத்.** இவர் முகர்ரம் முஹம்மது அய்யூப் கான் சாஹிப் உடைய மகன் ஆவார். டேரியான்வாலா, நாரோவால் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இர்பானுல்லாஹ் கான் சாஹிப் நாரோவால் ஜமாஅத்தின் அமீருடைய Cousin ஆக இருந்தார். **ஷ**ஹாதத்தின் போது இவரது வயது 61. தாருஸ் ஸிக்ரில் இவரது **ஷ**ஹாதத் நிகழ்ந்தது. பொருள் தியாகத்தில் நல்ல முறையில் பங்குபெறக் கூடியவர். சந்தாக்களை முறைப்படி வழங்கி விடுவார். லாஹூரில் நல்லடக்கம் செய்யப்பட்டார். குழந்தைகளை தர்பிய்யத் வகுப்பில் எப்போதும் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தி வருவார். நல்ல மனிதர். இறைவனுடன் சிறப்பான தொடர்பு வைத்திருந்தார்.

இவரது மனைவி கூறுகிறார்: எனக்கு ஏதாவது நடந்து விட்டால் குழந்தைகளை அஹ்மதிய்யத் மற்றும் கிலாஃபத்துடன் இணைந்து இருக்கச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துவார்.

**இர்பான் அஹ்மத் நாஸிர் சாஹிப் ஷஹீத்.** இவர் அப்துல் மாலிக் சாஹிபுடைய மகன். **ஷ**ஹீது மர்ஹூமின் தந்தை வழிப்பாட்டனார் மியான் தீன் முஹம்மத் சாஹிப் 1934 -ல் பைஅத் செய்தார். நாரோவால் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவர்களது (தாய்வழி) கொள்ளுப்பாட்டி ஹுஸைன் பிபி சாஹிபா. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய மகள் அமத்துல் கய்யூம் சாஹிபாவுக்கு பாலூட்டிய தாயார் ஆவார்கள்.

**ஷ**ஹீது மர்ஹூமுடைய தந்தை முகர்ரம் அப்துல் மாலிக் சாஹிப் ஆவார். லாஹூரின் தஃலீம் செயலர், வஸாயா போன்ற பொறுப்புகளை வகிக்கும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. **ஷ**ஹாதத்தின் போது இவரது வயது 31. தாருஸ் ஸிக்ரில் **ஷ**ஹீதானார்.

இவரது சகோதரர் கூறுகிறார்: டிராஃபிக் கண்ட்ரோல் செய்வது இவரது பொதுவான டியூட்டியாக இருந்தது. இந்த அடிப்படையில் சம்பவத்தின் முதல் சில ஷஹீதுகளில் இவர் இருந்திருக்கலாம். அதற்கு சாத்தியம் உள்ளது. இவர் வஸிய்யத் செய்தவர். நல்ல கட்டுப்பாடு உள்ளவர். எந்தப் பணியையும் மறுக்கமாட்டார். மிகவும் தொண்டு செய்யக் கூடியவர். பொதுச் சேவகர் என்ற பெயரில் பிரபல்யமானவர்.

**முகர்ரம் ஸஜாத் அஸர் பர்வானா சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் அல்லாஹ்யார். பர்வானா சாஹிபின் மகன் ஆவார். இவர் முஹம்மத் அஸ்லம் பர்வானா சாஹிபின் மருமகன் ஆவார். இரயில்வேயில் ஒப்பந்த அடிப்படையில், கிளார்க் ஆக பணியாற்றினார். ஷஹாதத்தின் போது இவருக்கு வயது 30. குத்தாமுல் அஹ்மதிய்யாவில் நல்ல பொறுப்புடன் பணியாற்றக்கூடிய இளைஞராக இருந்தார். கிளை அமைப்புகளில் நீண்ட காலம் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. ஷஹீது தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத் பெற்றார். தகவல் கொடுத்துக் கொண்டே ஷஹீதாகி விட்டார். நயீம்ஷுஜப் சாஹிப் என்ற ஒரு காதிம் கூறுகிறார்: ஸஜாத் சாஹிப் என்னிடம் வந்து, இன்று எனக்கு இங்கு டூட்டி தாருங்கள். செய்கிறேன். எனக்கு தாருஸ் ஸிக்ரில் கடைசி ஜுமுஆ. இதற்குப் பிறகு நான் எனது கிராமத்திற்கு செல்லப் போகிறேன். நான் எனது டூட்டியை அவருக்கு கொடுத்து விட்டேன். டூட்டி கொடுத்தவாறு ஷஹீதாகி விட்டார். அவர் ஊருக்குப் போகவில்லைதான். ஆனால் அல்லாஹ்வுடைய திருப்தியில் சென்று சேர்ந்து விட்டார். மிகவும் தொண்டுள்ளம் கொண்டவர். வேலை முடிந்ததும் உடனே ஜமாஅத் ஆஃபீஸிற்கு வந்து விடுவார். இரவு 11-12 மணி வரை பணி செய்வார்.

ஷஹீது மர்ஹூமின் மனைவி கூறுகிறார்: ஒரு வாரத்திற்கு முன்பு நான் கனவு கண்டேன். காயமுற்ற நிலையில் சஜ்ஜாத் வீட்டுக்கு வந்தார். எனது வயிற்றில் கடும் வலி ஏற்பட்டுள்ளது எனக் கூறினார்.நான் அவரது ஆடையை உயர்த்திப் பார்த்த போது இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இது அவரது மனைவி கண்ட கனவாகும். சம்பவத்தன்று இவருடைய வயிற்றில் குண்டு பாய்ந்தது. அல்லாஹ் இவர்கள் எல்லாரின் தகுதியையும் உயர்த்துவானாக.

**மஸ்வூது அஹ்மத் அக்தர் பாஸவாஜ் சாஹிப் ஷஹீது**. இவர் முஹம்மத் ஹயாத் பாஸவாஜ் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீதின் தந்தையார் பாஹ்வல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். பின்னாளில் ஸியால்கோட்டில் வாழ்ந்தார். பாஹ்வல் மவ்லவி மூலம் பைஅத் செய்தார். அவரது சகோதரர் ஒரு ஜமாஅத்தின் தலைவராக இருந்தார். பாஹ்வல் நகரில் படித்தார். பிறகு ரப்வா வந்தார். பாப்டாவின் ஓய்வு பெற்ற அதிகாரி ஆவார். 1975 முதல் 2000 வரை பணியின் காரணமாக கொயிட்டாவில் தங்கி இருந்தார். அங்கிருந்தே பணி ஓய்வு பெற்றார். 2001 ல் லாஹூருக்கு மாற்றலானார். மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் உழைக்கக் கூடிய உறுப்பினர். தாருஸ் ஸிக்ர் ஹல்காவின் அமீன் பொறுப்பில் இருந்தார். ஸயீம் அன்ஸாருல்லாஹ் மற்றும் இஸ்லாஹ் வ இர்ஷாத் உதவிச் செயலராகவும், தாருஸ் ஸிக்ர் தஃலீமுல் குர்ஆன் செயலராகவும் பொறுப்பு வகித்தவர். ஷஹாதத்தின் போது வயது 72. தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத் அடைந்தார். அல்லாஹ்வின் அருளால் இவர் மூஸி (வஸிய்யத் செய்தவர்). இவரது மகன் டாக்டர் ஹாமித் சாஹிப் அமெரிக்காவில் இருக்கிறார். அவர் கூறுகிறார். நான் Green Card -ற்காக அப்ளை செய்ய நினைத்தேன்; முடியவில்லை. எனது தந்தை எனக்கு 1000 டாலர் அனுப்பினார். உடனே சென்று Green Card அப்ளை செய். விரைவில் நீ பாகிஸ்தான் வர வேண்டியது ஏற்படலாம் என்றார். நான் அப்ளை செய்த 25 நாட்களிலேயே Green Card கிடைத்தது. பொதுவாக 6 மாதங்கள் ஆகும். இவ்வாறு தந்தையார் மரணத்திற்கு போய் சேர்ந்து விட்டார்.

இவரைப் பற்றி தெரியவருவதாவது: இவர் காயமுற்று இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அருகிலிருந்த மஹ்மூத் அஹ்மத் சாஹிபிடம் கூறினார். நான் போய் விடுவேன். எனது குழந்தைகளை கவனித்துக் கொள்ளுங்கள். அவர் தனது ஆடையைக் கிழித்து காயத்தில் வைத்துக் கட்டினார். மக்களை கடைசி நேரம் வரை பராமரித்து வந்தார். ஓர் இளைஞரை அவர் மீது குண்டு பாய்ந்து விடாமல் இருப்பதற்காக கடைசி வரை தனக்குப் பின்னால் வைத்துக் கொண்டார். எல்லாரையும் நினைவில் வைத்திருந்தார். துஆ செய்து கொண்டிருக்க அறிவுறுத்தினார். தானும் தரூது ஓதிக் கொண்டிருந்தார். அருகிலிருந்து மஹ்மூது சாஹிபுக்கும் நினைவூட்டிக் கொண்டிருந்தார்.

ஷஹீது மர்ஹூமின் மனைவி கூறுகிறார்: ஒவ்வொரு இறை அடியார்களுடனும் எந்தக் குறிக்கோளும் இல்லாத தொடர்பு வைத்திருந்தார். ஜுமுஆவுக்கு முன்னர் அக்கம் பக்கத்தவரை ஜுமுஆவுக்கு வெளியே வருமாறு புறப்படச் செய்வார். எல்லாருடன் மகிழ்ச்சியுடன் சந்திப்பார். நல்ல புன்முறுவலுடன் இருப்பார்.

மஸ்வூது சாஹிபுடைய கடைசி விருப்பம் தமது மகன் ஒரு கொள்கை பரப்புனர் ஆக வேண்டும் என்பதாக இருந்தது. அவர் ரப்வா ஜாமியா அஹ்மதிய்யாவில் ஐந்தாம் ஆண்டு படித்து வருகிறார். தன்னிறைவு உணர்வுள்ளவர். சிறிய வீடு ஒன்று உள்ளது. ஆனால் மகிழ்ச்சியாக இருப்பார். எனது குத்பாக்களை மிகவும் கவனமாக கேட்பவராகவும், கேட்க வைப்பவராகவும் இருந்தார்.

அதுபோன்று தலைமையக பிரதிநிதிகள் வந்தால் எங்கள் வீட்டுக்கு வாருங்கள் என்று அழைத்துச் செல்வார். அவர்களுக்கு தொண்டு செய்ய வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று நினைப்பார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது எல்லா துஆக்களையும் நல்ல விருப்பங்களையும் நிறைவேற்றுவானாக. இவரது மகனுக்கு தமது வாழ்வை அர்ப்பணித்ததற்கான கடமையை நிறைவேற்ற வாய்ப்பளிப்பானாக.

**ஆஸிப் ஃபரூக் சாஹிப் ஷஹீது.** இவர் லியாகத் அலி சாஹிபின் மகன். இவரது தந்தையார் 1955 லேயே பைஅத் செய்தார். 1994 -ல் ஒருவர் இவரது தந்தையை (ஆஸிப் ஃபரூக் சாஹிபை) முகர்ரம் மவ்லானா முபஷ்ஷிர் கால்வான் சாஹிபிடம் அழைத்துச் சென்று ஏதாவது கேள்வி கேளுங்கள் என்றார். 1995 -ல் அவர் பைஅத் செய்தார். மவ்லானா முபஷ்ஷிர் கால்வான் சாஹிப் ஏதாவது கேள்வி கேட்குமாறு கூறியதும், எனக்கு ஒரு கேள்வியும் இல்லை. நான் பைஅத் செய்ய விரும்புகிறேன் என்றார். இதுவே நல்லியல்பு கொண்ட மக்களின் நடைமுறையாகும். அதற்குப் பிறகு குடும்பமும் பைஅத் செய்தது. ஷஹாதத்தின் போது இவரது வயது 30. B.A. Communication படித்திருந்தார். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் செயல்பாடுள்ள உறுப்பினர். M.T.A.லாஹூரின் சேவகர். இவர் வஸிய்யத் செய்தவர். தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

இந்த ஷஹீதும் தீவிரவாதிகள் தாக்கிக் கொண்டிருக்கும் போது அதனை M.T.A.-ல் படம் எடுப்பதற்காக வெளியில் வந்தார். அதற்காக மேல் மாடியில் இருந்து இறங்கிய போது தீவிரவாதியின் குண்டுகளால் ஷஹீதானார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக தாருஸ் ஸிக்ரில் தொடர்ந்து பணியாற்றினார். ஒரு மாதம் முன்பு பணியிலிருந்து விடுப்பு எடுத்திருந்தார். ஜுமுஆவுக்காக வீட்டிற்கு வந்த போது இன்று நான் எல்லா வேலைகளையும் முடித்து விட்டு வருகிறேன் என்று கூறினார். **எப்போதும் எனது வாழ்வும் மரணமும் தாருஸ் ஸிக்ரில்தான் என்று கூறுவார்.** இவரது தாயார், தந்தையார், சகோதரர்கள் அனைவரும் இவரது ஷஹாதத்தின் மூலம் எங்களுக்கு பெரும் கண்ணியம் கிடைத்துள்ளது என்று கூறுகின்றனர். இவரது இரத்தத்தை அல்லாஹ் ஜமாஅத்திற்கு பாசன நீராக ஆக்குவானாக. இது இவர்களின் உணர்வின் வெளிப்பாடாகும். ஷஹீது நல்லியல்பு கொண்டவர். இவருக்கு மூன்று தங்குமிடம்தான் உள்ளது. இதில் ஏதேனும் ஒன்றில்தான் இருப்பார். ஒன்று அலுவலகம் அல்லது தாருஸ் ஸிக்ர் அல்லது வீடு. எப்போதுமே இவருக்கு கோபமே வராது. இவரது தாயார் ஒருமுறை மகனே உனக்கு கோபமே வராதா? என்று கேட்டார். என் போன்ற பணியில் இருப்பவர்களுக்கு கோபம் வராது என்று பதில் அளித்தார்.

தாயார் சில நாட்களுக்கு முன் கனவில், ஒருவர் எனது மார்பில் சுட்டு விட்டார். நான் இது எனக்கு உரிய முடிவு என்று விளக்கம் கொடுத்தேன். ஆனால் எனது மகனின் ஷஹாதத் மூலமே இதன் விளக்கம் எனக்குப் புரிந்தது. இவரது ஷஹாதத்திற்கு சில நாட்களுக்குப் பிறகு ஜுன் மாதம் 5 ஆம் தேதி இவரது மனைவிக்கு அல்லாஹ் இன்னொரு மகனை வழங்கினான். இவரது பிள்ளைகளுக்கு அல்லாஹ் நற்செயலும் மார்க்கச் சேவையும் செய்ய வாய்ப்பு உடையவர்களாக ஆக்குவானாக. அவர்கள் நீண்ட வாழ்க்கையைப் பெறுவார்களாக.

**சேக் ஷமீம் அஹ்மத் சாஹிப் ஷஹீது**. இவர் சேக் நயீம் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீத் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஷேக் முஹம்மது ஹுஸைன்

சாஹிப் (ரலி) அவர்களின் பேரனும் கரீம் பக்ஷ் சாஹிப் (ரலி) அவர்களின் கொள்ளுப்பேரரும் ஆவார். ஷஹீது மர்ஹூமுடைய தந்தை வழிப்பாட்டனார் மர்ஹூம் சேக் ஹுஸைன் சாஹிப் அவர்கள் சுல்தான்பூர் கிளையில் 40 ஆண்டுகள் சதர் ஆக இருந்தார்கள். இவரது காலத்தில் தான் அங்கு மஸ்ஜித் கட்டப்பட்டது. ஷஹீத் அவர்கள் தமது பெற்றோருக்கு ஒரே குழந்தை. வீட்டில் ஒரே பராமரிப்பாளராகவும் இருந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 38. அல்ஃபலாஹ் பேங்கில் வேலை செய்து வந்தார். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் செயல்பாடுள்ள உறுப்பினர் ஆவார். தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நடந்தது. பொருள் தியாகத்தில் முன்னணியில் நிற்பவர். நல்லொழுக்கம் மிக்கவர். நல்ல அன்பு கொண்டவர். எந்த பணியையும் நல்ல முறையில் புரிந்து கொண்டு செய்பவர். அலுவலகத்தில் இவருடன் பணி செய்த ஜமாஅத் அல்லாத நண்பர்கள் இவரது மரணத்தின் போது வந்திருந்தனர். அவர்கள் கூறினார்கள். எப்போதும் சிரித்தவண்ணமாகவும், மக்களை சிரிப்பூட்டுபவராகவும் இருந்தார்கள். தாயார் நோயுற்று இருந்தார். முழு இரவும் விழித்திருந்து தொண்டு செய்வார். வீட்டு வாசல் கேட்டின் மேல் கலிமா தய்யிபா எழுதி வைத்திருந்தார்.

சம்பவம் நடந்த போது தமது வீட்டிற்கு பள்ளியிலிருந்து 1:45 மணிக்கு போன் செய்து விபரம் சொன்னார். பார்த்தவர் கூறுகின்றனர். அமீர் சாஹிபின் முன்னால் வந்து நின்று கொண்டார். தீவிரவாதிகள் உங்களுக்கு பின்னால் யார்? என்று கேட்க, எனது மனைவி, மக்கள், எனது இறைவன் என்று பதில் அளித்தார். சரி உனது இறைவன் பக்கமே செல்! என்று கூறி சுட்டு விட்டனர்.

அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது தாயார் கூறுகிறார். எனது மகன் மிகவும் அன்பு நேசம் உள்ளவன். என் மீது மிகவும் கவனம் உள்ளவன். எந்த வேலையையும் அவனுக்கு கைவந்த கலை. நல்ல சிறப்புகளை உடையவன்.

மனைவி கூறுகிறார்: எனது மாமனார் கூறியுள்ளார். எனது குழந்தைகள் எல்லாம் ஒவ்வொன்றாக இறந்த நேரத்தில் எனக்கு ஏன் நீ ஒரு குழந்தை தரவில்லை என்று இறைவனிடம் குறைபட்டேன்.

பிறகு அல்ஃபஸ்லில் ஒரு பெண்மணியின் கட்டுரை படித்தேன். அல்லாஹ் எனக்கு குழந்தையை தந்தால் நான் தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுப்பேன் என்று அப்பெண் எழுதியிருந்தார். இதனைப் படித்தவுடன் அல்லாஹ்வே நான் இப்போதே தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுக்க ஆரம்பிக்கிறேன். எனக்கு குழந்தையை வழங்குவயாக என்று துஆ செய்தார். அதன் பிறகு எனக்கு இந்த மகன் அதாவது எனது கணவர் பிறந்தார்.

எனவே எனது கணவர் சந்தாவின் அருளால் பிறந்தார். ஷஹீது மர்ஹூம் சில நாட்களுக்கு முன் தனது ஒரு கனவை கூறினார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள். உனது குழந்தையை என்னிடம் கொடு என்று கனவில் கூறினார்கள். இதன் பிறகு தமது எல்லா குழந்தைகளையும் வக்ஃப் செய்து விட்டார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

**முஹம்மது ஷாஹித் சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் முஹம்மது ஷஃபீ சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் தந்தை வழிப்பாட்டனார் ஃபிரோஸுத்தீன் சாஹிப் 1935 -ல் பைஅத் செய்தார். கோட்லி மாவட்டம் அஸாத் காஷ்மீரில் வாழ்ந்தவர். ஷஹாதத்தின் போது இவரது வயது 28. குத்தாமுல் அஹ்மதிய்யாவின் செயல்பாடுள்ள உறுப்பினர் ஆவார். தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நடந்தது. ஜுமுஆவின் போது மிஹ்ராப் பக்கத்தில் அமீர் சாஹிபின் அருகில் இவர் டியூட்டிக்காக நின்றிருந்தார். ஷஹாதத்திற்கு முன் தந்தையாருக்கும் நண்பருக்கும் போன் செய்து, நான் இந்த தீவிரவாதிகளை பிடிக்க முயற்சி செய்வேன் என்று கூறினார். இவரது முகத்தில் விரல் நகம் பதிந்த காயம் உள்ளது. எனவே இவர் தீவிரவாதிகளுடன் சண்டையிட்டிருப்பார் என்று தெரிகிறது. ஷஹாதத்திற்கு சில நாட்களுக்கு முன் நண்பர்களிடம் கூறினார்: யாருக்காவது என்னுடன் கொடுக்கல் வாங்கல் இருந்தால் கணக்கு முடித்துக் கொள்ளுங்கள் என்றார். சிகரெட் பிடிக்கும் தீய பழக்கம் இருந்தது. அதனையும் பல மாதங்களுக்கு முன்பு விட்டுவிட்டார். கடைசியாக தனது சகோதரருடன் பேசினார். அம்மாவிடம் கூற வேண்டாம் கஷ்டப்படுவார்கள் என்று மிகவும் மெல்லிய குரலில் கூறினார். தொழுகையில் பேணுதல் உள்ளவர். ஒவ்வொரு ஜுமுஆ தொழுகைக்கு முன்பும் ஸதகா கொடுக்கும் வழக்கம் உடையவர். மஸ்ஜிதுக்கு ஜுமுஆ தொழவும்,

டுட்டிக்காகவும் வந்த போது கூட ஸதகா கொடுத்திருந்தார். இவரது சட்டைப் பாக்கெட்டில் 50 ரூபாய் ஸதகா கொடுத்த ரசீது எடுக்கப்பட்டது. அப்பகுதியின் கடைக்காரர் அழுது கொண்டே சொன்னார். எப்போதும் சலாம் கூறுவார். இரு சகோதரர்கள் சேர்ந்த கடை நடத்தினர். இவரது தம்பி இன்று என்னை ஜுமுஆவுக்குப் போக விடு என்று கூறிய போது, இல்லை இன்று என்னை போக விடு; அடுத்த வாரம் நீ போ என்று கூறினார். திருமணம் ஆகவில்லை. தாயார் கல்யாணத்தைப் பற்றி கூறும் போது தங்கைக்கு முதலில் முடியட்டும் என்று கூறுவார். அல்லாஹ் இவரை தனது ரஹ்மத்தின் போர்வையில் மூடுவானாக.

**Prof. அப்துல் வதூத் சாஹிப் ஷஹீது.** இவர் அப்துல் மஜீத் சாஹிபின் மகன் ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சாஹாபியான சேக் அப்துல் ஹமீது ஷிம்லவியின் பேரர். லாஹூர் அரசுக் கல்லூரியில் English Professor ஆக இருந்தார். ஜமாஅத் பணிகளில் நல்ல செயல்திறன் மிக்கவர். இவரது மனைவியும் ஹல்கா (கிளை) சத்ர் லஜ்னா இமாயில்லாஹ்வாக இருந்தார். கிலாஃபத் ஜுபிளியின் போது இவரது முயற்சியால் ஹல்காவில் பெரும் கூட்டம் நடத்தப்பட்டது. நல்ல எளிமை, சகிப்புத் தன்மை உள்ளவர். கலிமாவுக்காக சிறை சென்றவர். வழக்கு 7 வருடமாக நடந்தது. ஷஹாதத்தின் போது இவரது வயது 55. L.L.B.முடித்தவர்.

மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் செயல்திறன் உள்ள சேவகர். இவர் வஸிய்யத் செய்துள்ளார். தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது. ஷஹீது அவர்களை தீவிரவாதிகள் சுட்டபோது முரப்பி சாஹிப்வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். தீவிரவாதி எதிரில் நின்று சுட்டான். வாசலின் அருகில் ஷஹீதாகி விழுந்து விட்டார். இவரது மனைவி கூறுகிறார்: மென்மையான இயல்புடையவராகவும் அன்பு காட்டுபவராகவும் இருந்தார். திருமணமாகி 23 ஆண்டுகளாகியும் கடுமையான வார்த்தையை ஒருபோதும் கூறியதில்லை. குழந்தைகளிடம் இரு சந்தர்ப்பங்களில் கடுமை காட்டுவார். 1) தொழுகை விஷயத்தில் 2) வீட்டில் நடைபெறும் தர்ஜுமத்துல் குர்ஆன் வகுப்பில் கலந்து கொள்ளா விட்டால் கடுமை காட்டுவார். கிட்டத்தட்ட 17 ஜுஸ்வுக்கான தர்ஜுமத்துல் குர்ஆன் வகுப்பு நடத்தி விட்டார். ஹதீஸின் தர்ஸும் வீட்டில் எப்போதும் நடைபெறும். சின்ன வயதிலேயே பொறுப்பாளராக இருந்து வந்தார். பணி செய்வதில் அதிக ஆர்வமுள்ளவர். பெரிய சகோதரர் கூறினார். சகோதரர்களிடம் நட்புரீதியான தொடர்பு வைத்திருப்பார். சகோதரர்களிடம் ஒருமித்த கருத்தைப் பெற்று பணி செய்வார். பிரச்சனை வரும்போதெல்லாம் இந்த ஷஹீது மர்ஹூமின் ஆலோசனையால் அவை தீர்க்கப்பட்டுள்ளன. தமது தம்பிக்காக ஒரு வீடு கட்டிக் கொண்டிருந்தார். எல்லா சகோதரர்களும் அதற்காக கடன் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்ட போது தனது பங்கை இந்த ஷஹீது மர்ஹூம் முதலில் எடுத்து வைத்தார். ஷஹீது மர்ஹூம் தமது சகோதரர்களிடம் எப்போதும் யாருக்காவது தேவையிருந்தால் அவருடைய தேவைக்கு பணம் கொடுத்து விட்டு என்னிடம் அதனை பெற்றுக் கொள்ளுங்கள் என்பார். அல்லாஹ் இவரது நன்மைகளை பிள்ளைகளிடமும் தொடரச் செய்வானாக.

**வலீது அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் சவுத்ரி முனவ்வர் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் தந்தை வழிப்பாட்டனார் அப்துல் ஹமீது சாஹிப். மிஹ்ராப்பூர்சிந்தில் ஜமாஅத்தின் முன்னாள் சதர் ஆக இருந்தார். 1952 -ல் அஹ்மதிய்யத்தை ஏற்றார். 10 ஏப்ரல் 1984 -ல் மிஹ்ராபூரில் இவரது தந்தை வழிப்பாட்டனார் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். அதேபோன்று ஷஹீதின் தாய்வழிப் பாட்டனார் முகர்ரம் அப்துர் ரஸ்ஸாக் சாஹிப் நவாப்ஷாசிந்தின் முன்னாள் அமீர் ஆவார். இவரை 7 ஏப்ரல் 1985 -ல் எதிரிகள் ஷஹீதாக்கினார்கள். இவரது தந்தை சதர் உமூமு ரப்வாவின் சேவகர். ஷஹாதத்தின் போது ஷஹீதின் வயது 17½. மருத்துவக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்துள்ளான். வஸிய்யத் செய்தவராகவும் இருந்தார். இவரது ஷஹாதத் தாருஸ் ஸிக்ரில் நடந்தது. லாஹூர் ஷஹீதுகளில் எல்லாரையும் விட வயதில் சிறியவர் இவர் தான்.

ஷஹாதத்தின் நாளில் ஜுமுஆவுக்காக கல்லூரியிலிருந்து மற்ற அஹ்மதி மாணவர்களுடன் வந்து தாருஸ் ஸிக்ர் பள்ளிக்கு வந்து விட்டார். சம மாணவ்கள் வருவதற்கு முன்பே இவர் வந்து விட்டார். சம்பவத்தின் போது மொபைலில் தொடர்பு கொண்ட போது எனது காலில் குண்டடிபட்டுள்ளது. பல ஷஹீதுகளின் ஜனாஸாக்கள் என் கண்முன் தென்படுகின்றன. துஆ செய்யுங்கள். அல்லாஹ் அருள்புரிவானாக என்று கூறினார். F.Sc.ரப்வாவில் முடித்து விட்டு லாஹூரில் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருந்தார். கடைசி

முறையாக ரப்வாவிலிருந்து லாஹூர் சென்ற போது தமது நண்பர்களின் வீடுகளுக்கு சென்று எல்லா நண்பர்களையும் பார்த்து, அனைவரிடமும் என்னை இப்போது சந்தித்துக் கொள்ளுங்கள்; நான் ஷஹீதாகவும் செய்யலாம். யாருக்கு என்ன தெரியும்? என்றார்.

ஷஹீது மர்ஹூம் ஐவேளை தொழக்கூடியவர். வழியில் செல்லக்கூடிய நண்பர்களை பள்ளிக்கு அழைத்து வந்து விடுவார். மூன்று சகோதரிகளுக்கு இவர் ஒரே சகோதரன். ஷஹாதத்தின் போது வக்ஃபே நவ் செயலர் கூறினார்:

வலீது அஹ்மத் என்ற இந்த ஷஹீது 11 வயது சிறுவனாக இருந்த போது ஒரு நாள் வக்ஃபே நப் பையன்களிடம் ஒவ்வொருவராக வருங்காலத்தில் நீ என்னவாகப் போகிறாய் என்று நான் கேட்ட போது, வலீதிடம் கேட்ட போது, நான் எனது தாதாவைப் போன்று ஷஹீத் ஆவேன் என்றான்.

ஷஹீத் படிப்பு அறிவு குறித்து மதிப்பிடுவதற்கு ஒரு சம்பவம் உள்ளது. ஷஹாதத்திற்கு பிறகு மூன்றாம் நாள் இவருடன் படித்த மாணவர்கள மூன்று முறை இரங்கல் கூட்டம் நடத்தினர். இதில் கலந்து கொண்டவர்களுள் பெரும்பாலார் அஹ்மதி அல்லாதவர்களாக இருந்தனர். ஷஹீது மர்ஹூமின் ஆசிரியர் போன் மூலம், ஆசிரியர்களும், மாணவர்களும் இவரது நல்லடக்கத்தில் பங்கு பெறுவதாக ரப்வா வருவதற்கு நிகழ்ச்சிகள் போட்டு விட்டோம். எல்லா மாணவர்களும் ஏங்கி அழுது கண்ணீர் விடுகின்றனர். ரப்வா வந்து குண்டடி பட்டவரின் முகத்தைப் பார்த்து நிலைகுலைந்து விடக்கூடாது என்று பயந்து போய் ரப்வா வரும் திட்டத்தை தள்ளி வைத்து விட்டோம்; வேறொரு நேரத்தில் வருவோம் என்று தெரிவித்தார். அல்லாஹ் இவரது தியாகத்தை ஏற்றுக் கொண்டு ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான வலீதுகளை ஜமாஅத்திற்கு வழங்குவானாக.

**முஹம்மத் அன்வர் சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் முஹம்மத் கான் சாஹிபின் மகன் ஆவார். இவர் சேக்பூராவைச் சார்ந்தவர். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடைய கிலாஃபத்தில் பைஅத் செய்தவர். ஆரம்ப காலத்திலேயே ராணுவத்தில் சேர்ந்து விட்டார். 10 வருடம் முன்பு பணி ஓய்வு பெற்றார். பைத்துந்நூர் மார்டன் டவுனில் Security ஆக பணியாற்றிக் கொண்டிருந்தார். ஷஹீதாகும் வரை நல்ல முறையில் அப்பணியை செய்து வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 45. மஸ்ஜித் மார்டன் டவுனில் Security ஆக இருக்கும் நிலையில் மரணித்தார். இவர் வஸிய்யத் செய்தவர். இவரது மகன் காயமுற்று மருத்துவமனையில் இருக்கிறார். ஷஹீது மர்ஹூம் மஸ்ஜிதின் Main gate -ல் டயூட்டியில் இருந்தார். தீவிரவாதிகளை தூரத்திலேயே பார்த்து விட்டு தம்முடன் பணி செய்த காதிமிடம் அதோ வருகிற அந்த மனிதரைப் பார்த்தால் சற்று சந்தேகமாக இல்லையா? என்று கேட்க, அந்த இளைஞர் உங்களுக்கு யாரைப் பார்த்தாலும் சந்தேகம்தான் என்று பதில் கூறினார். அப்போது அந்த ஷஹீது மர்ஹூம் கூறினார். இல்லை. நான் ராணுவத்தில் இருந்தவன். சிலரது நடவடிக்கைகளைப் பார்த்தாலே கண்டுபிடித்து விடுவேன். இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போதே தீவிரவாதிகள் பக்கத்தில் வந்து சுடத் தொடங்கினர். இவர்களும் அவர்களை எதிர்கொண்டனர். ஒரு காதிம் கூறினார். நீங்கள் உள்ளே வந்து விடுங்கள். அப்போது இவர், இல்லை; சிங்கம் பின்வாங்குவதல்ல என்றார். இவரிடமிருந்த துப்பாக்கி மூலம் சுடத் தொடங்கினார். அதில் ஒரு தீவிரவாதி காயமுற்றார். மற்ற தீவிரவாதி சுடத் தொடங்கினார். அதில் அதே இடத்தில் ஷஹீதாகி விட்டார். மார்க்கப் பணிக்காக எந்த நேரத்தையும் கைவிடுவதில்லை. மஸ்ஜிதின் பகுதிகளை பெருக்குவது குளியலறையை சுத்தம் செய்வது போன்ற அனைத்தையும் செய்து வந்தார். பள்ளிவாசல் கட்டுமானப் பணி நடந்து கொண்டிருந்த போது 24 மணி நேரமும் வேலை செய்து வந்தார். பெற்றோருடனும் அன்புடன் சேவை செய்தார். அவர் மனைவி கூறுகிறார்: கடந்த ஒரு மாதமாக தஹஜ்ஜுத் தொழுது வந்தார். குழந்தைகளிடம் நீங்கள் தொழுது விட்டீர்களா இல்லையா? குர்ஆன் ஓதினீர்களா? என்பதுவே இவரது முதல் கேள்வியாக இருந்தது.

**அன்சாருல் ஹக் சாஹிப் ஷஹீது.** இவர் மலிக் அன்வாருல் ஹக் சாஹிபின் மகன் ஆவார். இவர் காதியானுக்கு அருகிலுள்ள ஒரு ஊரைச் சேர்ந்தவர். பாகிஸ்தான் இராணுவத்தில் வேலை செய்தார். ஷஹாதத்தின் போது இவருடைய வயது 63 ஆகும். மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நடந்தது. காலை 8.30 மணிக்கு புதிய கோர்ட் அணிந்தவாறு ஏதோ ஒரு பணிக்காக போய் விட்டு அங்கிருந்து

ஜுமுஆவுக்காக தாருஸ் ஸிக்ர் வந்து விட்டார். ஜுமுஆ தொழுகையை ஒருபோதும் தவறவிட்டதில்லை. முன்வரிசை நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். குண்டு வெடித்ததில் காயமுற்றார். மேலும் உடம்பில் பல்வேறு பகுதிகளில் ஐந்து குண்டுகள் பாய்ந்திருந்தன. காயமுற்ற நிலையில் மருத்துவமனை எடுத்துச் செல்லப்பட்டார். அங்கே போய் சேர்ந்ததும் ஷஹீதாகி விட்டார். இவரது மருமகள் கூறுகிறார். இவர் ஷஹாதத்தின் பதவிக்கு மிகவும் தகுதியானவராக இருந்தார். உள்ளத்தால் மிகவும் மென்மையானவர்; தூய்மையானவர்; எளியவர்; எவருடனும் சண்டை சச்சரவை விரும்பாதவர்.

இவருக்கு சாதாரண வருமானம் தான். பென்ஷன் கிடைத்து வந்தது. தாயாருடன் மிகவும் அன்பு கொண்டவர். கிலாஃபத்துடன் நல்ல விசுவாசம் இருந்தது. பெற்றோருக்கு தொண்டு செய்யக் கூடியவர். ஓய்வுபெறும் காலம் வரும் முன்பே பணி ஓய்வு பெற்றுக் கொண்டு தொண்டு செய்தார். தமது குழந்தைகளிடம் தவறு இல்லா விட்டால் கூட அண்டை அயலாருடன் நல்ல உறவை பேணுவதற்காக குழந்தைகளை மன்னிப்பு கேட்கச் சொல்வார். தானும் மன்னிப்பு கேட்பார். ஷஹாதத்திற்கு இரண்டு மாதம் முன்பு தமது குடும்பத்திலுள்ள சில பிரச்சனைகளை முன் வைத்து ஐந்து பக்கங்கள் கொண்ட அறிவுரை கடிதம் எழுதினார். அதில் தமது குழந்தைகளைக் குறித்து கூறினார்.

உங்களை மன்னிப்பு கேட்கச் சொன்னதற்காக எனது பிள்ளைகளாகிய உங்களிடமும் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது குழந்தைகளுக்கும் இவரது நன்மைகளை தொடர்வதற்கு வாய்ப்பு வழங்குவானாக. ஆமீன்.

**நாஸிர் மஹ்மூத் கான் சாஹிப் ஷஹீது.** இவர் ஆரிப் நஸீம் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் தந்தையார் ஆரிப் நஸீம் 1968 -ல் பைஅத் செய்தவர். அமிர்தசரஸ் மாவட்டத்தைச் சேர்ந்தவர். நாடு பிரிவினையின்போது இங்கு வந்து லாஹூரில் செட்டில் ஆகி விட்டார். ஷஹீது குத்தாமுல் அஹ்மதிய்யாவின் செயல்திறனுள்ள சேவகர். Printing Agency பணி செய்து வந்தார். இவர் நாஸிம் உமூமியாகவும் நாயிப் காயிதாகவும் இருந்தார். வஸிய்யத் செய்தவர். தாருஸ் ஸிக்ரில் இவரது ஷஹாதத் நிகழ்ந்தது. ஷஹாதத்தின் போது இவரது வயது 39. ஷஹீதின் சகோதரர் ஆமர் மஸ்வூது சாஹிப் கூறுகிறார்: தாருஸ்ஸிக்ரில் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்த போது நான் ஹாலினுள் இருந்தேன். எனது இந்த சகோதரர் (ஷஹீது) ஏணிப்படியின் அருகில் இருந்தார். தாக்குதல் நடந்த போது போனில் பேசினார். நான் பாதுகாப்பாக இருக்கிறேன். ஏணிப்படியின் கீழ் கணிசமான மக்கள் உள்ளனர் என்றார். தீவிரவாதிகள் கை எறி குண்டை வீசிய போது மற்றவர்கள் காயப்படாமல் இருப்பதற்காக குண்டை கையினால் பிடித்தார். குண்டு இவரது கையில் வெடித்தது. அங்கேயே ஷஹீதானார். மற்றவர்களை காப்பாற்றி விட்டு ஷஹீதானார்.

ஷஹீது மர்ஹூம் வீட்டில் முதன்முதலாக வஸிய்யத் செய்திருந்தார். வீட்டின் எல்லா பணிகளையும் தானே கவனித்து வந்தார். தொடர்புகளை விரிவுபடுத்துவதில் ஆர்வமுள்ளவர். இவரது ஷஹாதத்தின் போது ஜமாஅத் அல்லாதவர்கள் நிறைய பேர் சந்திக்க வந்தனர்.

இவரது சகோதரர் கூறினார்: நாங்கள் ஒரு கார் வாங்கினோம். ஈது போன்ற நாட்களில் வாகன வசதியில்லாதவர்களை முதலில் பள்ளியில் கொண்டு போய் விட்டு விடுவார். இரண்டாவதுதான் வீட்டில் உள்ளவர்களை பள்ளிக்கு எடுத்துச் செல்வார். ஷஹாதத்திற்கு ஒரு வாரம் முன்பு கனவு கண்டார்.

கனவில் என்னை (ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை) பார்த்திருக்கிறார். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எனது முதுகில் தட்டி விட்டு கவலைப்படாதீர்கள். எல்லாரும் நன்றாக நடக்கும் என்று கூறுகிறார்கள். இவரது தியாகத்தின் மூலம் ஜமாஅத்திற்கு அதிகமான வெற்றிகள் குவியட்டுமாக. அல்லாஹ் ஜமாஅத்திற்கு மகிழ்ச்சியைக் காட்டுவானாக.

இன்னும் இரு ஷஹீதுகளைப் பற்றி கூறுகிறேன்.

**உமைர் அஹ்மத் மலக் சாஹிப் ஷஹீது.** இவர் அப்துர் ரஹீம் சாஹிபின் மகன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஹாபிஸ் நபி பக்ஷ் சாஹிப் அவர்கள் ஷஹீது மர்ஹூமின்

கொள்ளுத்தாத்தா ஆவார்கள். பைஸுல்லாஹ் பகுதியைச் சேர்ந்தவர். காதியானுக்கு அருகிலுள்ளது இவரது ஊர். இவரது தாதா மலக் ஹபீபுர்ரஹ்மான் சாஹிப் ஜாமியா அஹ்மதிய்யாவில் ஆங்கிலம் கற்றுக் கொடுத்து வந்தார். அதுவன்றி மற்ற பள்ளிகளிலும் பாடம் நடத்தினார். காதியான் T.I. School –ல் தலைமை ஆசிரியராகவும் இருந்தார். கோல்ட்போஸ்ட் மாவட்டத்தைச் சேர்ந்த ஹகீம் ஃபஸ்லுர் ரஹ்மான் முபல்லிக் சாஹிப் அவர்கள் ஷஹீது மர்ஹூமின் தந்தையாரான முகர்ரம் அப்துர் ரஹீம் சாஹிபின் பெரியப்பா ஆவார்கள். ஷஹீது மர்ஹூம் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் செயல்பாடுள்ள உறுப்பினராவார். நான்கு வருடமாக லாஹூர் மாவட்ட நாஸிம் இஷாஅத் (வெளியீட்டுச்) செயலராக இருந்தார். ஜமாஅத்தின் கம்பியூட்டர் பிரிவின் Association –ன் ஆடிட்டராகவும் இருந்தார். மூன்று வருடமாக லாஹூர் பகுதியின் தலைவராக இருந்தார். இவரது தாயார் பைஸல் டவுண் கிளையின் சதர் லஜ்னா இமாயில்லாஹ்வாக இருந்தார்கள். வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 36. மஸ்ஜித் மார்டன் டவுணில் குண்டடிபட்டார். மருத்துவமனை எடுத்துச் செல்லும் வழியில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

ஜுமுஆ நாளில் வழக்கத்திற்கு மாறாக புதிய வெள்ளை ஆடை அணிந்து வீட்டிலிருந்து வெளியேறினார். தந்தையார், இன்று ரொம்ப அழகாக இருக்கிறீர்கள்? என்று கூறினார். அலுவலகத்தின் பணியாளர்களும் அதையே கூறினர். ஜுமுஆவிலும் வழக்கத்திற்கு மாறாக முதல் வரிசையில் இருந்தார். தீவிரவாதிகள் சுட்டபோது குண்டடி பட்டதில் ஹாலுக்குள் இரண்டாவது வரிசையில் புரண்டு கொண்டிருந்தார். போனில் தனது தந்தையாரிடம் பேசிக் கொண்டிருந்தார். அல்லாஹ் ஹாபிஸ். நான் போகிறேன் என்னை மன்னித்து விடுங்கள் என்றார். தனது சகோதரனைப் பற்றி விசாரித்தார். தண்ணீர் கேட்டார். ஒரு பணியாளர் தண்ணீர் கொண்டு வந்துகொடுத்தார். குரல் பலவீனப்பட்டது. மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். மருத்துவமனையில் கண்ணைத் திறந்து தாயாரைப் பார்த்தார். தாயாரிடம் தண்ணீர் கேட்டார். தாயார் தமது கையால் முகத்தை தடவிக் கொண்டிருந்தார். அப்போது தாயாரின் விரலை இலேசாகக் கடித்தார். நான் உயிரோடு இருக்கிறேன் என்று தெரிவிப்பதற்காக அவ்வாறு செய்தார். உட்பகுதியில் பாதிப்பு ஏற்பட்டிருந்ததால் இரத்தம் வழிந்து கொண்டே இருந்தது. ஆபரேஷன் செய்யும் போது ஷஹாதத்தின் பதவி கிடைத்தது.

நல்ல தொடர்பு இருந்தது. கட்டுப்பமானப் பணி ஒப்பந்த அடிப்படையில் செய்து வந்தால், படைப்பினங்களுக்கு சேவை செய்வதில் ஆர்வம். இவரது ஷஹாதத்தின் போது பார்க்க வந்த மக்கள், இவர் நல்ல மனிதர். எதனையும் பிரச்சனையாக எடுக்கமாட்டார் என்று கூறினார்கள். அல்லாஹ் இவர்களின் தகுதியை உயர்த்துவானாக.

இக்பால் ஆபித் சாஹிப் ஜமாஅத்தின் கொள்கைப்பரப்புநர் எழுதுகிறார்: உமைர் அஹ்மத் மலக் சாஹிப் தீவிரவாதிகளின் தாக்குதலால் அல்லாஹ்விடம் போய் விட்டார். இவருக்கு குண்டடி பட்டிருந்த போது நான் அவருக்கு போன் செய்த போது அவர் கூறியது, முரப்பி சாஹிப். குதா ஹாபிஸ் – அல்லாஹ்வே போதுமானவன். நான் போகிறேன். குதா ஹாபிஸ். குதா ஹாபிஸ். அவரது குரல் மிகவும் பலவீனமாக இருந்தது. மேலும் ஒரே ஒரு வார்த்தை சொன்னார். மஸ்ஜித் நூரில் தாக்குதல் நடைபெறுகின்றது. எனக்கு குண்டடிபட்டுள்ளது.

பிறகு குதா ஹாபிஸ் என்று கூறியதன் மூலம் அவர் சொல்ல விரும்பிய கருத்து நான் போகிறேன்; ஆனால் அஹ்மதிய்யத்தின் பாதுகாப்பு இனி உங்கள் பொறுப்பு என்பது தான். எங்களது இரத்தம் வீணாகிவிட வேண்டாம். இந்த உயிர் தியாகிகளின் தியாகத்தை அஹ்மதிகள் எப்போதும் நினைவில் வைத்திருப்பர். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய பெயரை உலகில் நிலைநாட்டுவதற்கு தம்மால் முடிந்த எல்லா முயற்சியும் செய்வர். பின்வாங்கமாட்டார்கள்.

**சர்தார் இப்திகாருல் கனி சாஹிப் ஷஹீது.** இவர் முகர்ரம் சர்தார் அப்துஷ்ஷகூர் சாஹிபின் மகன் ஆவார். ஹஸ்ரத் பைஸ் அலி (ரலி) அவர்கள் ஆப்பிரிக்காவில் ஹஸ்ரத் ரஹ்மத் அலி சாஹிபின் மூலம் அஹ்மதியானவர். ஆப்பிரிக்காவில் இருந்து திரும்பி அமிர்தசரஸ் போகாமல் காதியானில் வந்து குடியேறினார். ஷஹீத் சாஹிப் வஸிய்யத் அமைப்பில் சேர்ந்தவர். ஷஹாதத்தின் போது இவருக்கு வயது 43. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத் பெற்றார். பொதுவாக மஸ்ஜித் நூர் மார்டன் டவுணில் ஜுமுஆ

தொழுவார். ஆனால் சம்பவத்தன்று ஜுமுஆ தொழுவதற்காக தமது பணியை விட்டு விட்டு மஸ்ஜித் தாருஸ் ஸிக்ர் சென்றார். சர்தார் அப்துல் பாஸித் சாஹிப் என்ற இவரது மாமாவிடம் ஷஹாதத்திற்கு முன்பு பேசினார். வீட்டிற்கும் போன் செய்தார். யா ஹாபிஸ் யா ஹாபிஸ் என்று கூறிக் கொண்டிருந்தார். மாமாவிடமும் துஆவுக்காக வேண்டினார். தீவிரவாதிகள் எம்மை சுற்றி உள்ளார்கள். துஆ செய்யுங்கள் என்று கூறினார். இவரது மனைவிக்கு பள்ளியில் தாக்குதல் நடப்பதாக தெரிய வந்ததும், அவருக்கு போன் செய்து ஜுமுஅவுக்கு போகாதீர்கள் எனறு கூற நினைத்தார். ஆனால் அவர் மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் இருந்தது தெரிய வந்தது. வீட்டினரிடமும் துஆ செய்யுமாறு கூறி வந்தார். மாலை 3.30 மணிக்கு ராணுவத்தைச் சார்ந்த ஒரு நண்பருக்கு போன் செய்து இங்கு இவ்வாறு நிலைமை உள்ளது. போலீஸ் எதுவும் செய்ய முடியவில்லை. எங்களுக்கு உதவி செய்ய நீங்கள் பள்ளிக்கு வாருங்கள் என்றார்.

ஷஹீதாகும் வரை மற்றவர்களை காப்பாற்ற முயன்று கொண்டிருந்தார். சந்தர்ப்பம் பார்த்து ஒரு தீவிரவாதியை இவர் பிடித்த போது இன்னொரு தீவிரவாதி சுட்டு விட்டான். இவரால் பிடிக்கப்பட்ட தீவிரவாதி தனது ஜாக்கெட்டுக்குள் கைவிட்டு குண்டை வெடிக்கச் செய்ய முயற்சித்தான். முழுமையாக வெடிக்கவில்லை. கொஞ்சம் இருந்த வெடிப்பொருள் வெடித்ததால் இவர் ஷஹீதானார். தீவிரவாதியும் கடும் காயமடைந்தான். அவரால் எளிதாக தப்பியிருந்திருக்கலாம் என்று பக்கத்தில் இருந்தவர்கள் கூறினர். ஷஹீதுக்கு கித்மத்தே கல்க்கில் மிகுந்த ஆர்வம் இருந்தது. யாருக்காவது இரத்தம் தேவைப்பட்டால் உடனே கொடுப்பார். நல்ல பழக்கவழக்கமுள்ளவர்.

மனைவி கூறுகிறார்: நண்பர்களுக்கு எதுவும் தேவையென்றாலும் ஓடிப்போய் உதவி செய்வார். வீட்டில் எல்லா வேலைகளிலும் பங்கெடுப்பார். பாத்திரங்களை கூட துலக்கித் தருவார். எளிமையானவர். நன்மைகளை மறைத்து வைப்பார். இஸ்திக்ஃபார், தரூது எப்போதும் ஓதி வந்தார். இரக்க குணம் உள்ளவர். உறவினர் என்ற முறையிலும் சிறந்தவர். நல்ல மனிதர். குழந்தைகளிடம் அன்பு கொண்டவர். தாயாருக்கு பணிவிடை செய்யக் கூடியவர். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவர்களது பின்னால் இருப்பவர்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக. நன்மையில் நிலைத்திருக்கச் செய்வானாக.

வருங்காலத்தில் இன்ஷா அல்லாஹ் மற்ற உயிர்த்தியாகிகளைப் பற்றி கூறுவேன். இது மிகவும் நீண்டு கொண்டே செல்லும். அல்லாஹ் எல்லா அஹ்மதிகளையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக.

★ ★ ★ ★ ★


JUMUA KUTHBA

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAITUL FUTUH MOSQUE, LONDON

ON 11.06.2010

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**